

புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2044 | மார்ச் 07, 2013 | புரட்சி 12 | முழக்கம் 8 | விலை: ரூ.3.00


## சதீஷ் நம்பியார் கும்பல் விரித்த சூழ்ச்சி வலை

# அய்.நா.வின் துரோகம்: அதிர்ச்சித் தகவல்கள்

***முள்ளி வாய்க்கால் இனப் படுகொலை நடந்தபோது அய்.நா.வில் அதன் செயலாளராக இருக்கும் பான்–கி–மூன் ஆலோசகரான இந்திய மலையாள அதிகாரி விஜய் நம்பியார், அய்.நாவின் மனித நேய உதவிகளுக்கான அதிகாரி ஜான் ஹோல்ம்ஸ் ஆகியோர் திட்டமிட்டு அய்.நா. தலையீட்டை தடுத்து நிறுத்தியுள்ளனர். இதற்கு பான்–கி–மூனும் மவுன சாட்சியாகிவிட்டார். விஜய் நம்பியார் இனப்படுகொலையைத் தடுக்காத நிலையில் அவரது உடன் பிறந்த அண்ணன் சதீஷ் நம்பியார், இலங்கை இராணுவத்துக்கு கொழுத்த சம்பளத்தில் ஆலோசகராக இருந்து தமிழினப் படுகொலைக்கு ஆலோசனைகளை வழங்கிக் கொண்டிருந்தார்.***

***அய்.நா.வின் இந்த சட்டவிரோத துரோக செயல்பாடுகள் இப்போது அம்பலமாகியுள்ளன. அய்.நா.வின் மற்றொரு அதிகாரியான சார்லஸ் பெட்ரி தலைமையிலான குழு, இது குறித்து அய்.நா. அமைப்புக்குள்ளேயே ஆய்வு செய்து, அறிக்கை ஒன்றை தயாரித்துள்ளது. அந்த இரகசிய அறிக்கை இப்போது இணைய தளங்கள் வழியாக வெளியே வந்துள்ளது. அதிர்ச்சியூட்டும் அந்த அறிக்கையின் முக்கிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன:***

மனித நேய உதவிகளாக போர் முனையில் சிக்கியிருந்த தமிழர்களுக்கு உணவு, மருந்து பொருட்களை 10 நாட்களுக்கு ஒரு முறை 18 ஆயிரம் மெட்ரிக் டன் பொருட்கள் அனுப்பப்பட வேண்டும். ஆனால், 2009 ஜனவரி 15 ஆம் தேதிக்குப் பின்பு எந்தவித உதவிப் பொருட்களையும் ஐ.நா. அனுப்பவில்லை என்பது மட்டுமல்ல, அதற்கான எந்தவித முயற்சியும் எடுக்கவில்லை.

ஜனவரி 15 ஆம் தேதி அன்று இலங்கை இராணுவத்திடம் ஒப்புதல் பெற்ற பிறகே உதவிப் பொருட்கள் போர் பகுதிக்கு அனுப்பப்படுகிறது. இந்த உதவிப் பொருட்களுக்கான வண்டிகள் 16 ஆம் தேதியே திரும்பும் என்கிற உத்திரவாதத்துடன் சென்றன. ஆனால், உறுதியை மீறி இலங்கை அரச தாக்குதலை 16 ஆம் தேதியே தீவிரப்படுத்தியது. இதன் காரணமாக இந்த அய்.நா. உதவிக் குழு முல்லைத் தீவு பகுதியிலேயே இரண்டு வாரங்களுக்கு மேலாக முடங்க நேர்ந்தது. அப்போது போர் தீவிரமாக நடந்தது. (மருத்துவமனைகளைத் தாக்குவது, ஐ.நா. பணியாட்கள் இருக்கும் பகுதியைத் தாக்குவது, பொது மக்கள் குழுமியிருக்கும் பகுதிகளைத் தாக்குவது போன்றவை நடந்தன). தாக்குதலால் கொலை செய்யப்பட்ட தமிழர்களின் கணக்கெடுப்புகளை கொழும்புவிலுள்ள உயர் அதிகாரிகளுக்கு முல்லைத் தீவில் சிக்கிக் கொண்ட அய்.நா. பணியாளர்கள் குறுஞ் செய்தி வழியாக அனுப்புகிறார்கள். அய்.நா. கண்டு கொள்ளவில்லை.

அதன் பின்னர், இந்தக் குழுவில் இருந்து இருவர் கொழும்புவிற்கு தப்பிச் சென்று அங்குள்ள ஐ.நா. அலுவலகத்தில் களத் தகவலை பகிர்கிறார்கள். அவ்வாறு பகிரும்போது, போரில் கொல்லப்படும் தமிழர்களின் இறப்பினைக் கணக்கெடுக்கும் வேலை ஐ.நா. அலுவலகத்தில் நடக்காததைக் கவனித்து, அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு, இவர்களது கள தகவல் அடிப்படையில் இறப்பு தகவல்கள் அதற்குப் பிறகுதான் தொகுக்கப்படுகின்றன. இது 2009 பிப்ரவரி இரண்டாவது வாரத்தில் நிகழ்ந்தது. மூன்றாவது வாரத்தில் அதிர்ச்சிக்குரிய அளவில் தமிழர்கள் போர்க் களத்தில் கொல்லப்பட்டு இறக்கிறார்கள்.

மார்ச் 2009, முதல் வாரத்தில் இந்தத் தகவலை அறிந்த ஜெனிவா ஐ.நா.வின் உலக தலைமைச் செயலகம் உடனடியாக அரசியல் குழுவிலிருந்து உயர் அதிகாரியை அனுப்புகிறது. அவர் கொழும்புவில் களநிலையை அறிந்ததும் “நாம் உடனடியாக நடவடிக்கை எடுத்து தடுத்து நிறுத்த வில்லை. எனில் நாமும் குற்றவாளிகளாவோம்” என்று பதிவு செய்கிறார். தொகுக்கப்பட்ட தகவலை எடுத்துக் கொண்டு மார்ச் 9 இல் ஐ.நா. தலைமை அலுவலகம் செல்கிறார்.

இதற்கிடையே போரில் கொல்லப்பட்டவர்கள் எண்ணிக்கையை உடனடியாக அறிவிக்க வேண்டும் என்று அய்.நா. மனித உரிமை ஆணையத் தலைவர் நவநீதம் பிள்ளை அதிகாரிகளுக்கு உத்தரவிடுகிறார். அதிர்ச்சி அடைந்த விஜய் நம்பியார் அதை எதிர்த்து, அவசர அவசரமாக அன்றைய தினமே, ஐ.நா.வின் மனித உரிமை ஆணையத்திற்கு ஒரு விரிவான மின்னஞ்சலை அனுப்புகிறார். அந்த மின்னஞ்சலில், “இலங்கையில் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கையை நம்மால் உறுதி செய்ய முடியாது; எனவே வெளியிட வேண்டியதில்லை” என பதிகிறார். மேலும், “ஒரு வேளை நீங்கள் அவ்வாறு எண்ணிக்கையை வெளியிட விரும்பினால் அவற்றினை நீர்த்துப் போகச் செய்து வெளியிடுமாறு” குறிப்பிடுகிறார். அந்த மின்னஞ்சல் மேலும் இரண்டு முக்கிய செய்திகளைக் காட்டுகிறது. ‘இலங்கை அரசன் மீது போர்க் குற்றம், மனித குலத்திற்கு எதிரான குற்றத்தினை நாம் இப்போது வைக்க முடியாது. அவ்வாறு செய்தால் இலங்கை அரசின் விரோதத்தினை நாம் சம்பாதிக்க வேண்டி வரும்; அது நமக்கு நல்லதல்ல” என்கிறார். இது மட்டுமல்லாமல் குற்றச்சாட்டுகளில் இலங்கையையும், விடுதலைப் புலிகளையும் ஒன்றாகவே நாம் பாவிக்க (குற்றம் சாட்ட) வேண்டும்” எனச் சொல்கிறார். பின் இதே உள்ளர்த்தம் உள்ள மின்னஞ்சல் பிற துறைகளில் இருந்தும், குறிப்பாக மனித நேய உதவிகளுக்கான அதிகாரி ஜான் ஹோல்ம்ஸ்மிடமிருந்தும் அனுப்பப்பட்டு, இறுதியில் மார்ச் 12-13 ஆம் தேதி மனித உரிமை ஆணையத்தின் அறிக்கைகளை நீர்த்துப் போகச் செய்து, விடுதலைப் புலிகளை கடுமையாக குற்றம் சாட்டி வெளியிடப்படுகின்றன. இனப்படுகொலை நடத்தி வரும் இலங்கை அரசு காப்பாற்றப்படுகிறது.

இந்த மார்ச் 12-13 ஆம் தேதி அறிக்கை தான் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டதன் தொடர்பாக வெளியிடப்பட்ட இறுதி அறிக்கையாக அமைகிறது. அதுவும் புலிகளை குற்றம் சாட்டிய இந்த அறிக்கையை இலங்கையில் இருந்த ஐ.நா.வின் களப்பணியாளர்கள்கூட ஏற்காமல் விமர்சனம் செய்கிறார்கள்.

**இந்த வேலையை விஜய் நம்பியார் செய்தபோது, கிட்டதட்ட 45 நாட்களுக்கும் மேலாக உணவும், மருந்தும் இல்லாமல் ஆயிரக்கணக்கான தமிழர்கள் போர் முற்றுகைப் பகுதியில் பிணமாகி விட்டனர் என்பதை சார்லஸ் பெட்றி பதிவு செய்கிறார்.**

இவ்வாறு இலங்கை அரசால் ஈழத் தமிழர்கள் கொல்லப்படுவதைப் பற்றிய முழுமையான தகவல்கள் சர்வதேச சமூகத்திற்குக் கிடைக்காமலிருக்கும் வேலையை விஜய் நம்பியார் செய்கிறார். மேலும் புலிகளைக் குற்றஞ்சாட்டுவதன் மூலமாக ‘புலிகள் ஒடுக்கப்பட வேண்டியவர்கள், பயங்கரவாதிகள். எனவே, இது பயங்கரவாதத்திற்கு எதிரான போர்’ என்று உலகிற்கு அறியச் செய்கிறார். இதன் மூலமாக இலங்கை அரசானது சர்வதேச சமூகத்தின் முன் நியாயமாக்கப்படுவதுடன், இனப் படுகொலைக்கான உதவிகள் அந்த அரசிற்குக் கிடைக்கிறது.

மனித நேய உதவிப் பொருட்களான உணவு, மருந்துப் பொருட்களை அனுப்ப தடை செய்யப்பட்டதை உலகின் கவனத்திற்குக் கொண்டு செல்வதைத் தடுக்க மறைமுகமாக விஜய் நம்பியார் உதவியிருக்கிறார். மருந்தும், உணவும் போரின் கருவிகளாக பயன்படுத்தப்படுவதை ஐ.நா.வின் சாசனம் போர்க்குற்றமாகவே சித்தரிக்கிறது. இதை

2 ஆம் பக்கம்

## சென்னை மாவட்டக் கழகத்தின் அடுத்த செயல்பாடு: ஜாதி–தீண்டாமைக்கு எதிராக 10 நாட்கள் பரப்புரைப் பயணம்

*சென்னை மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் இரண்டாவது கட்டமாக ஜாதி-தீண்டாமை எதிர்ப்பு பரப்புரைப் பயணம் மார்ச் 15 ஆம் தேதி தொடங்கி 10 நாட்கள் நடைபெறுகிறது. முதல் கட்டப் பயணம் கடந்த ஆண்டு நவம்பர் 10 ஆம் தேதி தொடங்கி 18 ஆம் தேதி வரை 7 நாட்கள் நடந்தன.*

*வேலூர், வடாற்காடு, திருவண்ணாமலை, விழுப்புரம் மாவட்டங்களில் இந்தப் பயணம் திட்டமிடப்பட்டுள்ளது. நாள் ஒன்றுக்கு 5 கூட்டங்கள் வீதம் 48 பரப்புரைக் கூட்டங்கள் நடக்கின்றன.*

*மார்ச் 14 ஆம் தேதி - சென்னை புளியந்தோப்பில் தொடக்க விழா பொதுக் கூட்டம் நடைபெறுகிறது. கழகத் தலைவர், பொதுச் செயலாளர் பங்கேற்கிறார்கள். பயணத் திட்ட விவரம் வருமாறு:*

*மார்ச் 15 : அம்பத்தூர், பூவிருந்தவல்லி, ஸ்ரீபெரும்புதூர், வாலாஜாபேட்டை, ஆற்காடு - தங்கல்.*

*மார்ச் 16 – வேலூர், விரிஞ்சிபுரம், குடியாத்தம், பேரணாம்பட்டு, ஆம்பூர் - தங்கல்.*

*மார்ச் 17 – வாணியம்பாடி, ஜோலார்பேட்டை, திருப்பத்தூர், பரமானந்தல், செங்கம் - தங்கல்.*

*மார்ச் 18 – பாச்சல், திருவண்ணாமலை (2), மங்கலம், பெண்ணாத்தூர் - தங்கல்.*

*மார்ச் 19 – வானாபுரம், மூங்கில் துறைப்பட்டு, வடசிறுவள்ளூர், கடுவனூர், சங்கராபுரம் - தங்கல்.*

*மார்ச் 20 – கள்ளக்குறிச்சி, தியாகதுருகம், எளவனஞ்சூர் கோட்டை, உளுந்தூர்பேட்டை - தங்கல்.*

*மார்ச் 21 – அரசூர், விழுப்புரம், விக்கிரவாண்டி, கூட்டேரிப்பட்டு, திண்டிவனம் - தங்கல்.*

*மார்ச் 22 – செஞ்சி, வளத்தி, மேல்மலையனூர், அவலூர் பேட்டை, சேத்துப்பட்டு - தங்கல்.*

*மார்ச் 23 – தேசூர், மலையூர், வந்தவாசி, வீரம்பாக்கம், உத்திரமேரூர் - தங்கல்.*

*மார்ச் 24 – நெல்வா கூட்ரோடு, படாளம், செங்கல்பட்டு, வாலாஜாபாத், காஞ்சிபுரம்.*

*காஞ்சிபுரத்தில் பயணத்தின் நிறைவு பொதுக் கூட்டம் நடைபெறுகிறது. கழக செயல் வீரர்கள் தீவிரமாக ஏற்பாடுகளை செய்து வருகிறார்கள்.*

# கொல்லப்பட்ட தமிழர் எண்ணிக்கையை மறைத்தது அய்.நா.

*முதல் பக்கத் தொடர்ச்சி*

ஐ.நா.வின் உயர் அதிகாரிகளான விஜய் நம்பியாரும், ஜான் ஹோல்ம்ஸ்சும் செய்து முடிக்கிறார்கள். அவர்கள் இலங்கை அரசை நாம் விரோதித்தால் அவர்கள் மனித நேய உதவிகளை செய்ய நம்மை அனுமதிக்க மாட்டார்கள் என்கிற வாதத்தினை முன் வைத்தார்கள். இதுகூட பொய்யான வாதம். 15 ஜனவரி 2009-க்குப் பிறகு எந்த ஒரு மனித நேய உதவியும் ஐ.நா. போரின் இறுதிக் காலம் வரை கொண்டு சேர்க்கவில்லை என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

இது மட்டுல்ல, விஜய் நம்பியாரின் இந்த மின்னஞ்சல் மேலும் ஒரு விஷயத்தினை அம்பலமாக்குகிறது. அதாவது 12 மார்ச் 2009 அன்றே ஐ.நா.வின் முக்கிய குழுக்களில் ஒன்றான மனித உரிமைக் குழு ‘இலங்கை செய்தது போர்க் குற்றம்’ என்றும், ‘மனித குலத்திற்கு எதிரான குற்றம்’ என்றும் முடிவுக்கு வருகிறது. அவ்வாறு அறிவிப்பதற்கான ஆதாரங்களை அது பரிசீலித்த பிறகே அந்த முடிவுக்கு வருகிறது. இந்த ஆதாரங்கள் களப் பணியாளர்களிடமிருந்து பெறப்பட்டவையே. ஐ.நா. அலுவலர்கள் 15 ஜனவரி 2009 இல் களமுனையில் இருந்து அனுப்பிய செய்திகளின் அடிப்படையில்தான் இது சாத்தியமாயிற்று. மனித நேய உதவிகளைச் செய்யும் குழுவிற்கு சர்வதேச மனித உரிமை சட்டங்களை மீறி செயல்படுகிறோம் என்பது தெரிந்தே இருக்கும். ஆனால், இவ்வாறு முதல் தகவலாக நேரடியாகப் பெறப்பட்ட தகவலை உறுதி செய்ய முடியாத தகவலாக ஜான் ஹோல்ம்ஸ்சும், விஜய் நம்பியாரும் கருதுகிறார்கள். அய்.நா. பணியாளர்கள் தந்த தகவல் அறிக்கையாக வரும்போது, அதன் முக்கியப் பகுதிகளை ஐ.நா.வின் உயர் அதிகாரிகள் மறைத்தே வெளியிட்டுள்ளார்கள். அவ்வாறு கறுப்பு மையிட்டு மறைக்கப்பட்ட பகுதிகளை உடைத்து பார்த்தபோதுதான் இந்த துரோகங்கள் அம்பலமாயின.

இதன் பிறகு ஏப்ரல் 2009 இல் ஐ.நா.வின் தலைமை அலுவலகத்தில் இருந்து ஐ.நா.விற்கான துணைக் கோள் உதவியுடன் பெறப்பட்ட தகவலை அடிப்படையாகக் கொண்டு அங்கு பெருமளவிலான சேதங்கள் தமிழ் மக்களுக்கு ஏற்பட்டு இருப்பதாகவும், மருத்துவமனைகள் உள்ளிட்ட பகுதிகள் தாக்கப்பட்டு இருப்பதாகவும், செய்திகள் வெளியிடப்பட்டு இலங்கை அரசினைக் கண்டித்து அறிக்கை வெளியிடப்பட்டது. அதுவும் எப்பொழுதும் போல புலிகளையும் குற்றம் சாட்டியே வெளியிடப்பட்டது. ஆனாலும், ஜான் ஹோல்ம்ஸை அழைத்து, இலங்கை அரசு, கடுமையாக கண்டித்ததோடு, அந்த செய்தி உண்மைக்கு மாறான, உறுதிப்படுத்தப்படாத தகவல் என மறுப்பு வெளியிடச் சொல்லி நெருக்குகிறது. அதையேற்று இலங்கை அரசிற்கு மின்னஞ்சலை அனுப்புகிறார் அந்த அதிகாரி. அந்த மின்னஞ்சலை துணைக்கோள் செய்தி அறிக்கைக்கான மறுப்பு செய்தியாக இலங்கை வெளியிடுகிறது. பான்-கி-மூனின் செய்தித் தொடர்பாளர் பத்திரிகையாளர் சந்திப்பின்போது, மக்கள் இறப்பினைப் பற்றிய கேள்விக்கு ‘உடல்களை எண்ணுவது எங்களது பணியல்ல’ என்று கூறி விட்டார்.

ஐ.நா.வின் முக்கிய நிறுவனங்களான மனித உரிமை அமைப்பு இவ்வாறு அமைதியாக்கப்பட்டது. அய்.நா. பாதுகாப்புக் குழுவின் தலைவராக இருப்பவர் தக்காசு என்ற ஜப்பான் நாட்டுக்காரர். இவர் இலங்கைக்கு ஆதரவாகவும் விடுதலைப் புலிகளுக்கு எதிராகவும் அறிக்கை தயாரித்து, பாதுகாப்புக் கவுன்சிலில் இலங்கை அரசு குறித்து விவாதம் வராமல் தடுத்து விட்டார். போர் முடியும் காலம் வரையில் ஐ.நா.வின் பொதுச் சபையோ, பாதுகாப்பு கவுன்சிலோ கூட்டப்படாமல் தடுத்தனர். பான்-கி-மூன் இதை மவுனமாக அங்கீகரித்தார். ஐ.நா.வின் மற்ற நிறுவனங்களும் இவர்களின் உதவியோடு செயலிழக்கச் செய்யப் பட்டன.

ஐ.நா.வின் இனப்படுகொலை தடுப்பு ஆலோசகர் நேரடியாக கள ஆய்வு செய்து, ஐ.நா.வின் தலைமை செயலாளரான பான்-கி-மூனிற்கு செய்தி அனுப்பி, இனப்படுகொலையை தடுக்க வேண்டும் என்று கோரியிருந்தார். இவருக்கும் ஐ.நா.வின் மனித நேய, மனித உரிமைச் சட்டங்களை அமுல் செய்யும், உறுதிபடுத்தும் அதிகாரம் உண்டு. இவர் மே 15 ஆம் தேதி, 2009 இல் ஒரு குறிப்பினை மட்டும் அனுப்புகிறார். அதில் இனப்படுகொலை நிகழ்வதற்கான வாய்ப்பிருப்பதாக குறிப்பிடுகிறார். ஆனால், அவர் ஜான் ஹோல்ம்ஸ், விஜய் நம்பியார் முன் வைத்த ‘இலங்கை அரசுடன் ஒத்துழைத்து செயல்படுவது’ என்பதற்கேற்ப முடிவெடுத்ததாக பெட்ரி தனது அறிக்கையில் குறிப்பிடுகிறார். ஆக, இனப்படுகொலையை தடுத்து நிறுத்தும் அமைப்பும் செயல் இழக்கச் செய்யப்படுகிறது. இதன் மூலமாக இலங்கை அரசுக்கு இனப்படுகொலை செய்வதற்கான முழு சுதந்திரமும் அளிக்கப்பட்டது.

இது மட்டுமல்லாமல் போர் மற்றும் சிக்கல் நிறைந்த பகுதிகளில் பாதிக்கப்படும் குழந்தைகளைப் பாதுகாக்கும் ஐ.நா.வின் தலைமை அதிகாரிக்கான செயலாளர் தமது தகவல் அறிக்கையைப் போர் முடிந்து பல வாரங்கள் கழித்தே அய்.நா.வுக்கு அனுப்புகிறார். அய்.நா.வின் சட்டவிதிகளின்படி போர் நடந்த பகுதிக்குச் சென்று குழந்தைகளை தனிமைப்படுத்தி காப்பாற்ற வேண்டிய அதிகாரமும், கடமையும் இவருக்கு உண்டு. எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளாமல் குழந்தைகள் கொல்லப்படும் வரை காத்திருந்திருக்கிறார். 2009 பிப்ரவரியிலேயே இறந்தவர்களில் குழந்தைகள் அதிக எண்ணிக்கையில் உள்ளனர் என ஐ.நா.வின் இலங்கைக் குழு கணக்கிடுகிறது. ஆக, ஐ.நா.வின் அனைத்து நிறுவனங்களும் செயல்படுவதை மூன்று முக்கிய அதிகாரிகள் தடுக்கிறார்கள் அல்லது அதனை இலங்கைக்கு ஆதரவாக மாற்றுகிறார்கள்.

இவ்வளவுக்குப் பிறகு, இலங்கையின் பிரச்சினையை மேற்பார்வையிடவும், கையாளவும் விஜய் நம்பியார் கொழும்புக்கு அனுப்பப்படுகிறார். இவர் மே 14 ஆம் தேதி கொழும்பு வந்தடைகிறார். மே 15 ஆம் தேதிக்குப் பின்பு முள்ளி வாய்க்காலில் சிக்குண்ட மக்களையும், இலங்கை இராணுவத்திடம் சரணடையும் புலிகளின் அரசியல் தலைவர்களையும், பொது மக்களையும், போராளிகளையும், சர்வதேச சட்டங்களின்படி இலங்கை அரசு நடத்துவதையும், அதை மேற்பார்வையிட்டு உறுதி செய்வதுமே அவரது முதன்மைப் பணியாக இருந்திருக்க வேண்டும். ஆனால், இவர் முள்ளிவாய்க்காலுக்கு செல்வதற்கு இலங்கை அரசிடம் சடங்குக்காக அனுமதி கேட்கிறார். இலங்கை அரசு அனுமதி மறுக்கிறது. வெள்ளைக் கொடியுடன் வருபவர்களைக் காப்பாற்றுவதாக இலங்கை அரசு இவரிடம் உறுதி கூறுகிறது. ஆனால், உறுதியை மீறி வெள்ளைக் கொடியுடன் வந்தவர்களை ஈவிரக்கமின்றி இராணுவம் சுட்டுத் தள்ளியது. விஜய் நம்பியார் இது பற்றி கவலைப்படவில்லை; கண்டிக்கவும் இல்லை. பின்பு பத்திரிகையாளர் சந்திப்பில் ஏன் முள்ளிவாய்க்காலுக்குச் செல்லவில்லை எனும் போது “கொழும்புவிற்கு வெளியே தட்பவெப்பம் சரியாயில்லை” என்று அலட்சியமாக பதிலளித்தார்.

இனப் படுகொலையை தடுக்க அனுப்பப்பட்ட அய்.நா. அதிகாரி விஜய் நம்பியார், அதைத் தடுக்காமல் வெள்ளைக் கொடியுடன் வந்தவர்களை சர்வதேச சட்டங்களுக்கு எதிராக பிணமாக்க மறைமுகமாக உதவினார். அவரின் உடன் பிறந்த மூத்த சகோதரர் சதீஷ் நம்பியார் என்பவரே இந்த இனப்படுகொலைக்கான போரில் இலங்கை இராணுவத்தின் ஆலோசகராக செயல்பட்டவர். மேலும் ஐ.நா.வானது நடைமுறையில் எந்த ஒரு போர் நிகழ்ந்த பகுதிக்கும் அதன் அண்டை நாட்டினைச் சேர்ந்தவரை அனுப்புவது கிடையாது. ஆனால், இலங்கை விஷயத்தில் விதிகளுக்கு மாறாக இந்தியாவைச் சார்ந்த மலையாளியை அனுப்பியது.

மே 17, 18, 2009 இல் இனப்படுகொலை முடியும் வரை பான்-கி-மூன் இலங்கைக்கு வரவே இல்லை. போரின் இறுதி நாளில் வெள்ளைக் கொடியுடன் வந்த விடுதலைப் புலிகளின் தலைவர்களும், அவர்களின் குடும்பங்களும் கொலை செய்யப்பட்டதும், பெருந்திரளாக மக்கள் படுகொலை செய்யப்பட்டதும் சர்வதேச ஊடகங்களில் வெளியானபோதுகூட இவர் இலங்கைக்கு வரவில்லை. ஆனால், போர் வெற்றி விழாவில் கலந்து கொள்ளவே அவர் இலங்கையில் இறங்குகிறார் என ஐ.நா.வின் அதிகாரிகளே கூறுகிறார்கள். போர் ஆரம்பித்த காலத்திலிருந்தே இறுதி வரை புலிகளின் மீதே குற்றச்சாட்டினை ஐ.நா. வைத்தது. ஐ.நா.வினுடைய இலங்கைக்கான பணியாளர் குழுவினர் இதை உண்மைக்கு மாறானது என்று எதிர்த்திருக்கிறார்கள் என்பதை அறிக்கை பதிவு செய்திருக்கிறது. இலங்கை அரசு மீதான எந்தவித குற்றச்சாட்டினையும், ஆதாரங்கள் இருந்தபோதிலும் ஐ.நா. வெளியிடவில்லை. மனித நேய உதவிகளை குண்டு வீச்சினால் தடுத்த போதும்கூட இலங்கை அரசுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படவில்லை என்று அய்.நா. பணியாளர்கள் வெளிப்படையாக குற்றம்சாட்டியுள்ளனர்.

4 ஆம் பக்கம்

## போர்க்குற்றவிசாரணைகள்–ஒருபார்வை

போர்க் குற்றங்கள் செய்த கொடுங்கோலர்கள் சர்வதேச நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்ட வரலாறுகள் உண்டு:

- இரண்டாவது உலகப் போரில் யூதர்களை இனப்படுகொலை செய்த குற்றத்துக்காக இட்லரின் 12 படைத் தளபதிகள் நூரம்பர்க்கில் நடந்த சர்வதேச விசாரணையில் மரண தண்டனைக்கு உள்ளானார்கள். (இட்லர் தற்கொலை செய்து கொண்டுவிட்டார்) இதே குற்றத்துக்காக டோக்கியோவில் நடந்த விசாரணயில் 7 ஜப்பான் இராணுவத் தளபதிகள் தண்டிக்கப்பட்டு கொல்லப்பட்டார்கள்.
- 1995 ஆம் ஆண்டு போஸ்னியாவை ஆக்கிரமித்த செர்பிய இராணுவம் 7000–த்துக்கும் மேற்பட்ட அப்பாவி முஸ்லிம்களை கொன்று குவித்தது. இது தவிர உயிர் தப்ப முயன்ற 15000 முஸ்லிம் போராளிகளையும் செர்பிய இராணுவம் கொன்று குவித்தது. இந்த கொடிய போர்க் குற்றத்தை விசாரிக்க அய்.நா. விசாரணைக் குழுவை நியமித்தது. நெதர்லாந்து நாட்டில் ஹேக் நகரிலுள்ள சர்வதேச குற்ற தீர்ப்பாயத்தில் செர்பியாவின் முன்னாள் அதிபர் ராடோவன் கார்ட்சிக், இராணுவ அதிகாரி மிரோ சேவிக் ராடோவன் கராட்சிக் விசாரிக்கப்பட்டனர். இதில் அதிபர் கார்ட்சிக், விசாரணையின்போது மாரடைப்பால் இறந்து விட்டார். இராணுவ அதிகாரி கராட்சிக் 2008இல் கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டார்.
- 1945 இல் இட்லர் நடத்திய இனப் படுகொலைகளின்போது வதை முகாம்களில் யூதர்களை சித்திரவதை செய்து கொன்ற அடால்ஃப் எய்க்மென் குற்றத்திலிருந்து தப்பிக்க அர்ஜென்டினா நாட்டில் தலைமறைவாக வாழ்ந்தார். 15 ஆண்டுகளுக்குப் பிறகு 1960 இல் இஸ்ரேல் உளவாளிகள் அவரைக் கண்டுபிடித்து, இஸ்ரேலுக்கு கொண்டு வந்தனர். போர்க் குற்ற விசாரணை நடத்தி தூக்கிலிடப்பட்டார். இதேபோல், கிளாஸ் பார்பி என்ற மற்றொரு இட்லர் படை தளபதி 1987 இல் தலைமறைவாக இருந்தது கண்டறியப்பட்டு, பிரான்சு நாட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். யுத்தத்தின்போது இவர் பிரான்சில் படுகொலைகளை செய்தவர்.
- போஸ்னியா படுகொலைகளை விசாரிக்க யூகோஸ்லேவியாவிலும் (1993இல்), ருவாண்டாவின் இனப் படுகொலைகளை விசாரிக்க தான்சானியா நாட்டிலும் (1994இல்) சர்வதேச நீதிமன்றங்கள் நிறுவப்பட்டன. இதேபோல், இலங்கை அதிபர் இராஜபக்சேவும் அவரது அமைச்சர்களும், சிங்கள இராணுவத்தினரும் இழைத்த போர்க் குற்றம், இனப்படுகொலைக்கு சர்வதேச விசாரணைக்குட்படுத்தப்பட வேண்டும் என்பதே - இப்போது உலகம் முழுதும் பரவியுள்ள தமிழர்களின் வலியுறுத்தல்!

## ஏன் வேண்டும் வாக்கெடுப்பு?

- அயர்லாந்து நாட்டில் செயல்படும் உலகப் புகழ் பெற்ற ‘டப்ளின் நிரந்தர மக்கள் தீர்ப்பாயம்’ – இலங்கை அரசின் போர்க் குற்றத்தை உறுதிப்படுத்திவிட்டது.
- அய்.நா. பொதுச் செயலாளர் பான்–கி–மூன் நியமித்த குழுவும், போர்க் குற்றங்கள் நடந்தது உண்மைதான் என்பதை அடுக்கடுக்கான ஆதாரங்களுடன் மெய்ப்பித்துவிட்டது.
- போர் முடிந்ததற்குப் பிறகும் ஆள் கடத்தல், சட்ட விரோதப் படுகொலைகள் தொடருகின்றன. இந்த உண்மையை சர்வதேச மனித உரிமை அமைப்பான ‘ஆம்னஸ்டி இன்டர்நேஷனல்’ அய்.நா.வில் தாக்கல் செய்த அறிக்கையில் கூறியுள்ளது.
- எல்லாவற்றுக்கும் மேலாக, முள்ளி வாய்க்கால் படுகொலை நடந்து முடிந்தவுடன் இலங்கை அரசைக் காப்பாற்றிய அய்.நா. சபை, இப்போது அதன் குரலை மாற்றிக் கொண்டு கடந்த ஆண்டு இலங்கைக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்ற வேண்டிய கட்டாயத்துக்குத் தள்ளப்பட்டுவிட்டது.
- இலங்கை அரசு அறிவித்த பாதுகாப்பு வலையப் பகுதிக்குள் அரசு தந்த உறுதியை நம்பி அடைக்கலம் தேடிச் சென்ற 1,46,679 தமிழர்கள் காணாமல் போனதை (சாகடிக்கப்பட்டதை) மன்னார் அருட் தந்தை (பிஷப்), டாக்டர் ராயப்பா ஜோசப், அரசுப் பதிவேடுகளையே ஆதாரமாகக் காட்டி நிரூபித்துள்ளார்.
- எந்த அரசியல் உரிமையும் தமிழர்களுக்கு வழங்கப் போவது இல்லை. தமிழர்களும் இலங்கை குடிமக்கள்தான் என்று அறிவித்து விட்டார், இராஜபக்சே.

இலங்கையின் அரசியல் சட்டபடி –

- சிங்கள பவுத்தரே அதிபராக முடியும்.
- பவுத்தம் மட்டுமே அரசு மதம்.
- 100 சதவீத சிங்களர்களைக் கொண்டதே இலங்கை இராணுவம்.

இத்தகைய ஆட்சியின் கீழ் – இராணுவத்தால் கொல்லப்பட்டவர்கள் அத்தனை பேரும் தமிழர்கள்! இனியும் இணைந்து வாழ முடியுமா?

**வாக்கெடுப்பு மூலம் விடுதலைப் பெற்ற நாடுகள்:**

- 1983 இல் எத்தியோப்பாவிலிருந்து எரித்திரியா விடுதலை பெற்றது.
- 1999 இல் இந்தோனேசியாவிலிருந்து கிழக்கு தைமூர் – சுய நிர்ணய உரிமை பெற்றது.
- 2006 ஆம் ஆண்டில் யூகோஸ்லேவியாவிலிருந்து மாண்டி நீக்கோரா தனி நாடானது.
- 2011 இல் தெற்கு சூடான் தனி நாடானது.
  - இவை அய்.நா.வால் வாக்கெடுப்பு நடத்தப்பட்டு விடுதலை பெற்ற நாடுகள்.
  - இதே போன்ற வாக்கெடுப்பு நடத்தி ஈழ விடுதலையை உறுதி செய்ய வேண்டும்.
  - இது ஒன்றே உலகத் தமிழினத்தின் ஒருமித்த குரல்.

# ‘இனப்படுகொலை’ சர்வதேச சட்டங்கள் கூறுவது என்ன?

1948 ஆம் ஆண்டு இனப்படுகொலைக்கு எதிரான சர்வதேச ஒப்பந்தத்தை அய்.நா. உருவாக்கியது. இந்த ஒப்பந்தத்தை ஏற்று 140 நாடுகள் கையெழுத்திட்டன. இதன்படி இனப்படுகொலைக்கான விளக்கம் வரையறுக்கப்பட்டது.

பாதுகாப்பற்ற அப்பாவி மக்களை, பெண்களை, குழந்தைகளை அவர்கள் சார்ந்துள்ள இனம், மதம், அரசியல் சார்புகள், சமூகப் பொருளாதார நிலைகளை அடிப்படையாகக் கொண்டு, திட்டமிட்டு அவர்களை கூட்டம் கூட்டமாக நேரடியாகவோ அல்லது மறைமுக ஆணைகள் வழியாகவோ அழிப்பது ‘இனப்படுகொலை’.

மேற்குறிப்பிட்ட குழுவின் உறுப்பினர்களைக் கொல்லுதல்; குழுவைச் சார்ந்தவர்களுக்கு உடல் அல்லது உளவியல் ரீதியான தீங்குகளை இழைத்தல்; குழுவினர் முழுமையாகவோ அல்லது பகுதி பகுதியாகவோ அழிவதற்கான வாழ்வியல் நெருக்கடிகளை அக்குழுவின் மீது திணித்தல் – இந்த நடவடிக்கைகளும் இனப் படுகொலைகளேயாகும். எனவேதான் ஈழத் தமிழர்கள் கொன்று குவிக்கப்பட்டதும் இனப் படுகொலை. அவர்களின் தாயகம் ஆக்கிரமிக்கப்பட்டு, வாழ்விடங்கள் அழிக்கப்பட்டதும் இனப் படுகொலை. அவர்களின் கலாச்சார அடையாளங்கள் அழிக்கப்படுவதும் இனப் படுகொலை என்ற வரையறைக்குள் வருகின்றன.

இனப் படுகொலைக்கு எதிரான சர்வதேச சட்டங்களின்படி ஈழத் தமிழர்களுக்கான உரிமைகள் குறித்து சர்வதேச சட்ட ஆய்வாளர் பிரான்சிஸ் பாய்ல் தெளிவான விளக்கங்களை முன் வைத்துள்ளார். அவற்றை சுருக்கமாகப் பார்ப்போம்:

இனப்படுகொலைக்கு எதிரான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ள 140 நாடுகளுக்கும் அதற்கான கடமைகளை ஒப்பந்தம் வலியுறுத்துகிறது. இப்படி ஒப்பந்தத்தை ஏற்றுள்ள நாடுகளில் ஏதாவது ஒன்றில் ‘இனப் படுகொலை’ நடந்தால் கையெழுத்திட்ட நாடு இனப் படுகொலையைத் தடுத்து நிறுத்த உடனடியாக செயல்பட வேண்டும். இதன்படி இலங்கை அரசு மீது ஹேக்கில் அமைந்துள்ள பன்னாட்டு விசாரணை தீர்ப்பாயத்தில் ஏதேனும் ஒரு நாடு உடனடியாக வழக்குத் தொடர்ந்தாக வேண்டும். பன்னாட்டு தீர்ப்பாயம் உடனடியாக அவசர விசாரணை மேற்கொள்ள வற்புறுத்த வேண்டும். பன்னாட்டு தீர்ப்பாயம் உடனடியாக இனப்படுகொலைகளை நிறுத்த உத்தரவிட முடியும். அந்த உத்தரவு உள்நாட்டு நீதிமன்ற ஆணைக்கு சமமானதாகும். இது முதல் கட்ட நடவடிக்கை.

இரண்டாவதாக - இப்படி ஒரு ஆணையை சர்வதேச தீர்ப்பாயம் பிறப்பித்தவுடன் அதை நடைமுறைப்படுத்த வேண்டிய பொறுப்பு அதிகாரமிக்க அய்.நா. பாதுகாப்புக் குழுவுக்கு வந்துவிடுகிறது. சர்வதேச தீர்ப்பாயத்தின் ஆணை அய்.நா. பாதுகாப்புக் குழுவின் செயல்திட்டத்தில் இணைக்கப்பட்டாக வேண்டும். ஈழத்தில் தமிழர்கள் மீதான இனப் படுகொலை 1948 ஆம் ஆண்டிலிருந்தே தொடங்கிவிட்டது. எனவே சர்வதேச சட்டத்தின்படி இலங்கை மீது நடவடிக்கை எடுக்க ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ள நாடுகள் கடமைகளை செய்யத் தவறின. இனப்படு கொலைக்கு எதிராக கையெழுத்திட்டுள்ள நாடுகளில் இலங்கையும் ஒன்று என்பது குறிப்பிடத் தக்கது.

அத்துடன், சிவில் மற்றும் அரசியலுக்கான அய்.நா.வின் சர்வதேச உடன்பாடு முக்கியமானதாகும். இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ள நாடுகள் அனைத்து மக்களுக்கும் சுயநிர்ணய உரிமை உண்டு என்பதை ஏற்றுக் கொண்டாக வேண்டும். இந்த ஒப்பந்தத்திலும் இலங்கை கையெழுத்திட்டுள்ளது. தங்களுக்கான தனித்த அடையாளங்களைக் கொண்ட ஒரு தேசிய இனம், தங்களுக்கான அரசியல் உரிமைகளை முடிவெடுக்கும் உரிமையை இந்த ஒப்பந்தம் வழங்கியுள்ளது. இந்த உரிமைகள் ஈழத் தமிழர்களுக்கும் உண்டு. அதை அங்கீகரிக்க வேண்டிய பொறுப்பும் ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்டுள்ள இலங்கை அரசுக்கு உண்டு. இதே ஒப்பந்தத்தில் அடங்கியுள்ள மற்றொரு பிரிவு, “தங்கள் சொந்த வளங்களைப் பயன்படுத்தி வாழ்வதற்கான உரிமைகளை மக்களிடமிருந்து எந்தச் சூழலிலும் பறிக்கக் கூடாது” என்று கூறுகிறது. இது பொருளாதாரத்துக்கான உறுதி செய்யப்பட்ட உரிமை. இந்த உரிமைகளையும் தமிழர்களிடமிருந்து இலங்கை அரசு தொடர்ந்து பறித்து வருகிறது. அரசியல் உரிமைகளும், பொருளாதார உரிமைகளும் ஒன்றோடு ஒன்று தொடர்புடையவை. இனப்படுகொலைக்கு உள்ளாகி வரும் தமிழர்களிடமிருந்து அரசியல் உரிமைகளும் பொருளாதார உரிமைகளும் இலங்கை அரசால் தொடர்ந்து பறிக்கப்பட்டு வருகிறது. இவற்றைப் பாதுகாப்பதற்கு இலங்கை அரசே ஏற்றுக் கொண்டுள்ள அய்.நா. ஒப்பந்தத்தின்படி தமிழர்கள், தனியே பிரிந்து செல்வதற்கான உரிமைகளை இந்த ஒப்பந்தம் உறுதி செய்கிறது.

இது தவிர, “அரசுகளுக்கு இடையிலான நட்பு அடிப்படையிலான உறவுகள் மற்றும் ஒத்துழைப்புகள்” குறித்த அய்.நா.வின் பிரகடனம் ஒன்று இருக்கிறது. (சார்ட்டர் 1971) இதில் அடங்கியுள்ள கோட்பாடுகள் மீதான விரிவான விளக்கங்கள் அய்.நா.வில் அறிக்கையாக முன் வைக்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கையை அய்.நா. பொது அவையில் இலங்கை அரசு ஏற்றுக் கொண்டுள்ளது. இலங்கை அரசே ஏற்றுக் கொண்டுள்ள இந்த அறிக்கையின்படியே தமிழர்களுக்கான தேசிய சுயநிர்ணய உரிமை (தனியாக விடுவித்துக் கொள்ளும் உரிமை) உண்டு. இந்த அய்.நா. பிரகடனத்தின்படி, ஒரு இறைமையுள்ள சுதந்திர அரசை தமிழர்கள் நிறுவிக் கொள்ள முடியும். அல்லது ஒரு சுதந்திர அரசுடன் சுதந்திரமாக இணைத்துக் கொள்ள முடியும். மக்கள் சுதந்திரமாக முடிவெடுக்கும் எந்த ஒரு அரசியல் அமைப்பையும் உருவாக்கிக் கொள்ள முடியும்.

எனவே தமிழர்களின் அரசியல் தீர்வை முடிவெடுக்கும் உரிமை தமிழர்களுக்குத்தான் உண்டு. இலங்கை அரசுக்கு இல்லை என்பதே அய்.நா.வின் இந்த பிரகடனம் வலியுறுத்தும் கருத்து.

ஈழத் தமிழர்கள் தொடர்ந்து இனப்படுகொலைகளுக்கு உள்ளாகி வரும்போது, 1948 ஆம் ஆண்டு ஒப்பந்தப்படி இதில் கையெழுத்திட்ட நாடுகள் தமிழர்களுக்கு உதவிட முன் வரவில்லை. இந்த நிலையில் தங்களின் மீதான அழித்தொழிப்பிலிருந்து பாதுகாத்துக் கொள்ள ஒரு சுதந்திர அரசை தமிழர்கள் தங்களுக்கு நிறுவிக் கொள்ள வேண்டும். இதையே சர்வதேச சட்டங்களும் கூறுகின்றன - என்று பிரான்சிஸ் பாய்ஸ் எழுதியுள்ளார்.

# சுப்ரமணியசாமி இராஜபக்சே தூதராகிறார்!

சர்வதேசத் தரகரான பார்ப்பனர் சுப்ரமணியசாமி, அடுத்து இனப்படுகொலையாளர் இராஜபக்சேவின் தூதராக செயல்படத் தொடங்கியிருக்கிறார். இராஜபக்சே போர்க் குற்றங்கள், இனப் படுகொலைகள் அம்பலமாகி வரும் நிலையில், அய்.நா.வில் அமெரிக்காவின் தீர்மானத்தை இராஜபக்சேவுக்கு ஆதரவாக மென்மையாக்க சுப்ரமணியசாமி களமிறங்கியுள்ளார். கடந்த பிப்ரவரி 28 ஆம் தேதி கொழும்புக்குச் சென்று இராஜபக்சேவை சந்தித்துப் பேசிய அவர், உடனடியாக அமெரிக்காவுக்கு பறந்துள்ளார். அமெரிக்க அதிகாரிகளை சந்தித்து இராஜபக்சேவுக்கு ஆதரவாக நட்புறவை மேம்படுத்தும் முயற்சிகளில் ஈடுபடப் போகிறாராம். அண்மையில் நாடாளுமன்றத்தில் வெளியுறவுத் துறை அமைச்சர் சல்மான் குர்ஷித், இலங்கையும் அமெரிக்காவும் கலந்து பேசி, அய்.நா. தீர்மானம் குறித்து முடிவெடுக்க வேண்டும் என்று தெரிவித்த ஆலோசனையின் அடிப்படையில் சுப்ரமணியசாமி, தனது தூதுத் திருவிளையாடல்களைத் தொடங்கியிருப்பதாகத் தெரிகிறது. விடுதலைப் புலிகளை “அழித்ததற்காக” இராஜபக்சேவுக்கு இந்தியா ‘பாரத ரத்னா’ விருது வழங்கி கவுரவிக்க வேண்டும் என்று சுப்ரமணியசாமி மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

இனப்படுகொலையை நியாயப்படுத்தும் இதே சுப்ரமணியசாமி, கடந்த மார்ச் 2 ஆம் தேதி, திருச்சி திருவானைக்காவலில் நடந்த இந்து மறுமலர்ச்சி மாநாட்டில் பங்கேற்றுள்ளார். “சூத்திர” சைவ மடாதிபதிகள் பங்கேற்ற இந்த மாநாட்டுக்கு கொலைக்குற்றச்சாட்டில் பிணையில் வெளியே வந்திருக்கும் காஞ்சிபுரம் பார்ப்பன சங்கராச்சாரி ஜெயேந்திரன் தலைமை தாங்கியுள்ளார். “இந்துக்களில் பல்வேறு ஜாதிகள் இருந்தாலும், தேர்தல் நேரத்தில் அனைவரும் இந்துக்கள் என்ற உணர்வுடன் வாக்களிக்க வேண்டும்” என்று ஜெயேந்திரன் மறைமுகமாக பா.ஜ.க.வுக்கு ஆதரவு தெரிவித்து பேசியுள்ளார்.

DATE OF PUBLICATION 06.03.2013 TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/12-14
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/7776

# மருத்துவர் இராமதாசு வாதத்துக்கு ஆணித்தரமான மறுப்பு

“தலித் ஆண்கள் இடைநிலை ஜாதி பெண்களை ஏமாற்றி திருமணம் செய்து பிறகு, சொத்து கேட்டு மிரட்டுகிறார்கள். காதலித்த பெண்களை கை கழுவி விடுகிறார்கள்” என்று மருத்துவர் ராமதாஸ் கூறி வரும் குற்றச்சாட்டு உண்மையல்ல என்பது ஆய்வுபூர்வமாக மறுக்கப்பட்டுள்ளது. மதுரையிலுள்ள ‘எவிடென்சு’ தொண்டு நிறுவனம், இது பற்றி நடத்திய ஆய்வில், இடைநிலை ஜாதி ஆண்களால் திருமணம் செய்யப்பட்டு ஏமாற்றப்பட்ட தலித் பெண்களே அதிகம் என்றும், 80 சதவீத தலித் பெண்கள் வன்னியர் உள்ளிட்ட இடைநிலை ஜாதியைச் சார்ந்தவர்களால் திருமணம் செய்து ஏமாற்றப்பட்டவர்கள் என்பது தெரிய வந்துள்ளது. ஜனவரி 2009-லிருந்து டிசம்பர் 2012 வரை, 17 மாவட்டங்களில் நடந்த ஜாதி மறுப்பு திருமணங்கள் பற்றிய தகவல்களை தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழ் மக்கள் தகவல் தொடர்பு அதிகாரிகள், மாவட்ட காவல்துறை அதிகாரிகள் வழியாக தகவல்கள் பெறப்பட்டன. ஜாதி மறுப்பு திருமணம் செய்து கொண்ட 84 பெண்களில் பாதிக்கப்பட்ட தலித் பெண்கள் தான் அதிகம். 67 தலித் பெண்கள் இடைநிலை ஜாதி கணவர்களால் ஏமாற்றப்பட்டு கைவிடப்பட்டவர்கள். இதில் 32 பெண்கள் ‘பறையர்’ ஜாதியையும், 20 பெண்கள் ‘பள்ளர்’ ஜாதியையும், 13 பெண்கள் அருந்ததியர் ஜாதியையும் சேர்ந்தவர்கள். ஏமாற்றப்பட்ட தலித் அல்லாத பெண்கள் 17 பேர் மட்டுமே. 3 பேர் வன்னியரையும், 2 பேர் நாடார்களையும் மற்றும் 3 பேர் கவுண்டர், முதலியார், நாயுடு ஜாதிகளைச் சார்ந்த ஆண்களால் கைவிடப்பட்டவர்கள் என்று ஆய்வு தெரிவிக்கிறது. தலித் பெண்களை ஏமாற்றி நாடகத் திருமணம் நடத்தும் இடைநிலைச் ஜாதியினர் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தில் கைது செய்யப்பட்டவர்கள், பிணையில் எளிதாக விடுதலையாகாமல் தடுக்க, சட்டம் கடுமையாக்கப்பட வேண்டும் என்றும் எவிடென்சு நிறுவனம் வலியுறுத்தியுள்ளது.

2 ஆம் பக்கத் தொடர்ச்சி

போர் முடிந்த பிறகு ஐ.நா.வின் 99 ஆவது விதியின்படி இலங்கை மீது விசாரணை நடத்த வேண்டும் என ஐ.நா.வின் சட்ட நிபுணர் குழு கோரிக்கை வைக்கிறது. ஆனால், ஐ.நா.வின் விசாரணையை பான்-கி-மூன் மறுக்கிறார். 2010 ஜனவரி வரை (அதாவது ராஜபக்சே மீண்டும் அதிபராகும் வரை அய்.நா. விசாரணைக்கு இலங்கை அனுமதிக்கவில்லை) மார்ச் 2010 இல் தான் ஒரு விசாரணைக் குழுவினை பான்-கி-மூன் அமைக்கிறார். இந்த விசாரணைக் குழுவும் இலங்கைக்குள் செல்லாமலேயே அறிக்கை தயாரிக்கிறது. இலங்கைக்குள் அய்.நா. குழுவுக்கு அனுமதி மறுக்கப்பட்டது. இதை ஐ.நா. கண்டிக்கவே இல்லை.

இதுபோன்ற எண்ணற்ற ஆதாரங்களோடு ஐ.நா.வின் உயர் அதிகாரிகளின் செயல்பாடுகள் ஐ.நா.வின் உள்ளக அறிக்கையில் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. எந்தவித நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்படவில்லை. மாறாக இந்த உண்மைகளை மூடி மறைக்கவே முயற்சிகள் நடக்கின்றன. இது தொடர்பாக, மேலும் பி.பி.சி. போன்ற முன்னணி ஊடகங்கள் இந்த உண்மைகளைத் திரிக்கின்றன; துரோகத்துக்கு துணை நின்ற ஜான் ஹோல்ம்ஸ் என்கிற அதிகாரியை அழைத்தே பி.பி.சி. கருத்துக் களை பதியச் செய்தது. இந்திய ஊடகங்களும் இதை வெளியிடாமல் மௌனம் காக்கின்றன.

இந்த நிலை ஐ.நா.வின் உயர் அதிகாரிகள் தமிழீழ கோரிக்கையைப் பின்னுக்குத் தள்ளி ‘மறு சீரமைப்பு நல்லிணக்கம், வாழ்வுரிமை’ என்கிற சமூக நல கோரிக்கையை முன்னுக்குத் தள்ளும் வேலையை செய்து கொண்டிருக்கிறார்கள். கடந்த 2012 ஆகஸ்ட் 1 ஆம் தேதி ஐ.நா.வின் மறுசீரமைப்பிற்கான தலைவர் ஜான் ஜிங், இலங்கை அரசானது உலகிலேயே மறுசீரமைப்பிற்கு முன் மாதிரியாகத் திகழ்கிறது என புகழ்கிறார். இதுபோல பல புகழாரங்கள், அங்கீகாரங்களை ஐ.நா. உயர் அதிகாரிகள் இலங்கைக்கு தொடர்ச்சியாக வழங்குகிறார்கள்.

மற்றொரு முக்கிய செய்தியையும் குறிப்பிட வேண்டும். சித்தார்ஜ் சட்டர்ஜி என்கிற இந்தியா வின் முன்னாள் இராணுவ அதிகாரி இலங்கைக்கு அனுப்பப்பட்ட “அமைதிப் படை”யில் இருந்தவர். பாரசூட் மூலமாக யாழ் பல்கலைக் கழக வளாகத் திற்குள் புலிகளைத் தாக்க அனுப்பப்பட்டவர்களில் ஒருவர். அப்படி பாராசூட்டில் பல்கலைக்கழகத் துக்குள் குதித்து, தாக்குதல் நடத்த வந்தபோது விடுதலைப் புலிகள் திருப்பி சுட்டனர். அவருடன் வந்தவர்கள் அனைவரும் கொல்லப்பட, இவர் மட்டும் தப்பிச் செல்கிறார். அன்றிலிருந்து இன்று வரை இவர் புலிகளுக்கும், தமிழீழத்திற்கும், தமிழர் களுக்கும் எதிராக தொடர்ந்து கட்டுரைகளை எழுதி வருகிறார். இவர் தற்போது ஐ.நா.விற்கான பணியாளராக இருக்கிறார் என்பது மட்டுமல்ல, இவர் பான்-கி-மூன் இரண்டாவது மகளை மணம் புரிந்து இருக்கிறார். சதீஷ் நம்பியார், சித்தார்ஜ் சாட்டர்ஜி போன்றோரை நெருங்கிய உறவினராக வைத்து இருக்கும் ஐ.நா.வின் உயர் அதிகாரிகள் தமிழீழப் படுகொலையில் பங்கெடுத்து இருப்பது ஆச்சரியமில்லை.

சர்வதேச விசாரணையை பான்-கி-மூன் தடுத்ததன் மூலமாக ஐ.நா.வில் தமிழீழத்திற்கான பொது வாக்கெடுப்பினை நடக்க விடாமல் தடுத்துள்ளார்.

இந்த மறைக்கப்பட்ட நீதியை மீட்டெடுக்க வேண்டியது தமிழரின் கடமையாகும். சர்வதேச விசாணையையும், ஐ.நா.வில் பொது வாக்கெடுப்பினையும் தடுத்து நிறுத்திய இந்த அதிகாரிகளும், அதன் பின் உள்ள இந்திய அதிகாரிகளையும் விசாரித்து தண்டிக்கப்பட்டேயாக வேண்டும்.

**(நன்றி: “மே 17” இயக்க அறிக்கை)**

**தோழர்களே!** ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’
**ஏட்டுக்கு ஆண்டுக் கட்டணம் ரூ.200/-**
**உறுப்பினர்களை சேர்க்கும் பணியை தீவிரப்படுத்துங்கள்!**

# ஈரோடு ஒன்றியத்தில் எழுச்சி நடைபோட்ட பரப்புரை பயணம்



திராவிடர் விடுதலைக் கழகத்தின் ஈரோடு வடக்கு மாவட்டம் சார்பாக நடைபெற இருக்கின்ற மனு சாஸ்திர எரிப்புப் போராட்டத்தை விளக்கி, அனைத்து ஒன்றியங்களிலும் தெரு முனை விளக்க பரப்புரை நடத்தப் பட்டது.

அதன் ஒரு பகுதியாக கடந்த 17.02.2013 அன்று நம்பியூர் ஒன்றியத் திற்குட்பட்ட நம்பியூர், கோசனம் ஆகிய பகுதிகளிலும், 18.2.2013 அன்று எலத்தூர், செட்டிபாளையம், கூடக் கரை ஆகிய பகுதிகளிலும் பரப்புரை நடைபெற்றது.

தோழர்கள் அர்ச்சுணன், வேணு கோபால் ஆகியோர் சாதி ஒழிப்பு பாடல்களை பாட, இராம. இளங் கோவன் (மண்டல செயலாளர்), வேலுச்சாமி ஆகியோர் உரை யாற்றினர். பல புதிய பகுதிகளில் பரப்புரை நடந்தது.

முதல்நாள் பயணத்திற்கான உணவு, ஒலி பெருக்கி ஏற்பாடுகளை நம்பியூர் மற்றும் எலத்தூர் தோழர்கள் செய்திருந்தனர். இரண் டாவது நாள் ஏற்பாடுகளை கூடக் கரை தோழர்கள் செய்திருந்தனர்.

24.02.2013 அன்று காசிபாளையம், கொடிவேரி பிரிவு, அரசூர் உள்ளிட்ட பகுதிகளிலும், 25.2.203 அன்று பங்களாபுதூர், டி.என். பாளையம் உள்ளிட்ட பகுதிகளிலும் நடைபெற்றது. தோழர்கள் வேணு கோபால், அர்ச்சுணன், நிவாசு இளங்கோவன் ஆகியோர் சாதி ஒழிப்பு பாடல்களை பாட மண்டல செயலாளர் இராம. இளங்கோவன், வேலுச்சாமி, வேணுகோபால் ஆகி யோர் போராட்டத்தினை விளக்கி உரையாற்றினர். காசிபாளையம் பகுதியில் நடந்த பரப்புரையை மூத்த பெரியாரிய தொண்டர் செல்வம் துவக்கி வைத்து வாழ்த்துரை நிகழ்த் தினார்.

24, 25.2.13 அன்று நடைபெற்ற பயணத்திற்கான ஏற்பாடுகளை காசி பாளையம், அரசூர் தோழர்களும், தொழிற் சங்க தோழர்களும் ஏற்பாடு செய்திருந்தனர்.

பயணம் தொடர்ச்சியாக -

3.3.2013-4.3.2013 - கோபி ஒன்றியம்

10.3.2013-11.3.2013 - பெருந்துறை ஒன்றியம்

17.3.2013 - 18.3.2013 - பவானி ஒன்றியம்

24.3.2013 - 25.3.2013-அந்தியூர் ஒன்றியம்

31.3.2013 - 1.4.2013 - அம்மா பேட்டை ஒன்றியம்

7.4.2013 - 8.4.2013 - சத்தி ஒன்றியம்

- ஆகிய தேதிகளில் நடைபெறுகிறது.

பயணத்தின் நிறைவு விழா பொதுக் கூட்டம் குருவையில் நடைபெறும்.

பயணத்தில் பங்கேற்றக் கழகத் தோழர்கள் மிகுந்த உற்சாகத்துடன் தங்களின் பேச்சு, பாடல் திறமைகளை வெளிப்படுத்தினர்.

**செய்தி : நிவாசு**

“புரட்சிப் பெரியார் முழக்கம்”
**ஆண்டுக்கட்டணம் ரூ.200/-**
தொடர்புக்கு:
ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர்,
திருவான்மியூர், சென்னை-41.
✆ 99416 13535

## மணமகன் தேவை

பெயர் - சி. மணிமேகலை

பிறந்த தேதி : 01.06.1986

படிப்பு : முது அறிவியல், இளம் கல்வியியல் (கணிதம்) (M.Sc., B.Ed.,)

சொந்த ஊர் : தேனி

வேலை : அரசு தொடக்கப் பள்ளி ஆசிரியை, அறந்தாங்கி வட்டம்

மாத ஊதியம் : ரூ.18,000

விருப்பம் : சாதி மறுப்புத் திருமணம் செய்ய விரும்பும் அரசு (அ) தனியார் வேலையிலுள்ள திராவிடர் விடுதலைக் கழகத் தோழர் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புக்கு : 94861 61500

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 7th March 2013

OWNER & PUBLISHER & EDITOR : K. RAJENDRAN, PUBLISHED AT 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.

புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com
ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2044 | மார்ச் 14, 2013 | புரட்சி 12 | முழக்கம் 9 | விலை: ரூ.3.00

## சென்னை – சேலம் – திண்டுக்கல் – திருவாரூரைத் தொடர்ந்து ஜாதி – தீண்டாமைக்கு எதிராக

# நெல்லையிலும் கழக மாநாடு

*ஜாதி – தீண்டாமைக்கு எதிராகவும் – மனு சாஸ்திர எரிப்புக் கிளர்ச்சியை விளக்கியும் – திராவிடர் விடுதலைக் கழகம் மாவட்டந்தோறும் மாநாடுகளை நடத்தி வருகிறது.*

மார்ச் 9, 2013 அன்று நெல்லை மண்டல சார்பில், தமிழர் ஒற்றுமைக்கான ஜாதி-தீண்டாமை ஒழிப்பு மாநாடு, பாளையங்கோட்டை சந்தை ஜவகர் மைதானத்தில் நடைபெற்றது. தூத்துக்குடி, குமரி, நெல்லை மாவட்ட கழக சார்பில், இந்த மாநாட்டிற்கு மூன்று மாவட்டங்களிலும் சிறப்பான விளம்பரம் செய்யப்பட்டிருந்தது. தூத்துக்குடி மாநகரச் செயலாளர் பால். அறிவழகனின் ‘மந்திரமா? தந்திரமா?’ நிகழ்ச்சியைத் தொடர்ந்து ஆழ்வை ஒன்றிய செயலாளர் இரா. உதயகுமார்-கனி இணையரின் மகன்கள் அகராதி, புகழேந்தி ஆகியோர் வீர விளையாட்டான சிலம்பாட்டத்தை மேடையில் நடத்திக் காட்டினர்.

மாநாட்டின் வரவேற்பு உரையினை நெல்லை மண்டலச் செயலாளர் கோ. அ. குமார் ஆற்றினார். தொடர்ந்து தூத்துக்குடி மாவட்ட தலைவர் பொறிஞர் சி. அம்புரோசு, குமரி மாவட்டத் தலைவர் ஜா. சூசை உரைக்குப்பின் மும்பை தமிழாசிரியரும், பெரியாரியலாளருமான (பணையூரான் எனும் பெயரில் பெரியார் எனும் மூல வித்து எனும் கட்டுரையை ‘கீற்று’ இணையதளத்தில் எழுதியவர்) ஆசிரியர் காண்டீபன், மனு அதர்மம் விதைத்த நச்சுக் கருத்துக்களை விளக்கி, தமிழ் இலக்கியத்திலிருந்து ஆதாரங்களோடு பேசினார். அதனைத் தொடர்ந்து கழகப் பரப்புரைச் செயலாளர் பால். பிரபாகரன், தனது உரையில் ஜாதி ஒழிப்பு தமிழ் தேசிய விடுதலையின் அடிப்படை என்பதற்கான விளக்கத்தையும், தற்போது நிலவி வரும் ஜாதி, கொடுமைக்கு மனுதர்ம சாஸ்திரமே காரணம் என விளக்கிப் பேசினார். பேராசிரியர் திருநீலகண்டன் தனது உரையில், ஜாதிகளாய் பிரித்து வைத்து பார்ப்பனர் செய்த சூழ்ச்சியையும் மனு செய்த சூழ்ச்சியால் - பிற்படுத்தப்பட்டோர் பார்ப்பன ஆதிக்க கோட்டையின் ஒரு செங்கல்லைகூட பிடுங்க முடியவில்லை. ஆனால், தர்மபுரியில் வீட்டை உடைக்கிறார்கள் என ஆவேசமாக உரையாற்றினார். அதனைத் தொடர்ந்து தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கம் சார்பில் ச. தமிழ்ச் செல்வன், பார்ப்பன சூழ்ச்சியால் ஏற்பட்டுள்ள பின்னடைவு மற்றும் பகைமை பாராட்டும் நிலையினை - பொதுவுடமை கட்சியினர் - பெரியாரிய - அம்பேத்கரிய தோழர்களோடு வென்று காட்டுவோம் என்றார். ஆதித் தமிழர் பேரவைச் செயலாளர் பழ. நீலவேந்தன் தனது உரையில், மனு சாஸ்திரம் சொல்லும் சாதி கலப்பு ஏற்பட்டுவிடக் கூடாது என்ற கொள்கையினை தற்போது சாதி ஆதிக்க சக்திகள் பின்பற்றி வருவதை விளக்கிப் பேசினார்.

இறுதியாக கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையுரையாற்றினார். மனுதர்ம சாஸ்திரத்தை திராவிடர் விடுதலைக் கழகம் எரிக்கும் போராட்டத்தை அறிவித்து இருப்பதற்கான காரணத்தை விளக்கினார். இறுதியாக நெல்லை மாவட்ட கழக அமைப்பாளர் பெ.சு. அன்பரசு நன்றி கூறினார். மாநாட்டில் தர்மபுரி கலவர காட்சிகள் புகைப்படமாக வைக்கப்பட்டிருந்தது. கண் காட்சியை திரளானவர்கள் பார்த்துச் சென்றனர்.

மார்ச் 4 ஆம் தேதி தூத்துக்குடியில் மறைவுற்ற கழகப் பரப்புரைச் செயலாளர் பால். பிரபாகரன், தூத்துக்குடி மாநகரச் செயலாளர் பால். அறிவழகன் ஆகியோரது தந்தை பால்ராஜ் குமாரசாமி (வயது 76) அவர்களது படத்தினை, கழகத் தலைவர் கொளத்தூர் மணி திறந்து வைத்தார். அவரது நினைவுகளை தூத்துக்குடி மாவட்ட தலைவர் பொறிஞர் சி.அம்புரோசு நினைவுகூர்ந்து உரையாற்றினார்.




## மார்ச் 18, கழக மாநாட்டுக்கு திரும்புமிடமெல்லாம் சுவரெழுத்து, விளம்பரப் பதாகைகள்!

# கோவை களை கட்டுகிறது!

திராவிடர் விடுதலைக் கழக சார்பில் கோவை மண்டல “தமிழர் ஒற்றுமைக்கான ஜாதி-தீண்டாமை ஒழிப்பு” மாநாடு, மார்ச் 18 ஆம் தேதி நிகழ இருக்கிறது. திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்கள் மாநாட்டின் வெற்றிக்கு தீவிரமாக உழைத்து வருகிறார்கள். கோவை நகரம் முழுதும் திரும்புமிடமெல்லாம் சுவரெழுத்து பளிச்சிடுகிறது. தீண்டாமைக் கொடுமைகளையும், மாநாட்டு விளம்பரங்களையும் விளக்கும் பதாகைகள் நகரம் முழுதும் அமைக்கப்பட்டுள்ளன.

மாநாட்டின் காலை நிகழ்வுகள் காஞ்சி நகரிலுள்ள சீனிவாசா மாநகராட்சி மண்டபத்தில் தொடங்குகிறது. மாவட்ட கழக காப்பாளர் மேட்டூர் இராமச்சந்திரன் கழகக் கொடி ஏற்றுகிறார். மேட்டூர் டி.கே.ஆர். குழுவினர் இசை நிகழ்ச்சியுடன் கிருட்டிணகிரி பழனி நினைவு அரங்கில் கருத்தரங்கம் - கவியரங்கம் - பட்டிமன்ற நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. ஈரோடு மண்டல அமைப்புச் செயலாளர் இராம. இளங்கோவன் மாநாட்டைத் திறந்து வைத்து உரையாற்றுகிறார். ‘தலித் முரசு’ ஆசிரியர் புனித பாண்டியன் தொடக்கவுரையாற்றுகிறார். “நான் எரிப்பேன் மனு சாஸ்திரத்தை” - என்ற தலைப்பில் மடத்துக்குளம் மோகன் தலைமையில் நடைபெறும் கருத்தரங்கில் ‘சமத்துவ விரும்பியாக’ எனும் தலைப்பில் வெள்ள மடை நாகராசு, “பெண்ணாக” எனும் தலைப்பில் திருப்பூர் சிவகாமி, “தொழிலாளியாக” எனும் தலைப்பில் அ.ப.சிவா, “மாணவராக” எனும் தலைப்பில் சிலம்பரசன் ஆகியோர் உரையாற்றுகிறார்கள்.

12 மணிக்கு “காதல் துளிர்க்கட்டும்; ஜாதியம்

4 ஆம் பக்கம்

### திருச்சியில் மாநில பொறுப்பாளர்கள் – மண்டல செயலாளர்கள் கலந்துரையாடல் கூட்டம்

திராவிடர் விடுதலைக் கழக மாநில பொறுப்பாளர்கள், மண்டல அமைப்பாளர்கள் கலந்துரையாடல் கூட்டம் 23.3.2013 சனி காலை 10 மணியளவில் திருச்சியில் தமிழ்நாடு சோசியல் சர்வீஸ் சொசைட்டி(TASOSS)யில் நடைபெறுகிறது. பொறுப்பாளர்கள் தவறாது பங்கேற்க வேண்டுகிறோம்.

– கொளத்தூர் மணி
(தலைவர்)

விடுதலை இராசேந்திரன்
(பொதுச் செயலாளர்)

குறிப்பு: மத்திய பேருந்து நிலையம் அருகிலுள்ள மான்சிங் பேட்டை பேருந்து நிறுத்தத்தில் இறங்க வேண்டும்.

# கழகத் தலைவர் கொளத்தூர் மணி பங்கேற்ற நிகழ்வுகள்

*கழகத் தலைவர் கொளத்தூர் மணி பங்கேற்ற பல்வேறு நிகழ்வுகளின் தொகுப்பு.*

### தருமபுரி

07-02-2013 வியாழக்கிழமை காலை 10-30 மணியளவில், தருமபுரி அரசு கலைக் கல்லூரி கலையரங்கத்தில், மகளிர் நலம் மாநில மகளிர் ஆணையம் சிறப்பு கருத்தரங்கம் நடைபெற்றது. தருமபுரி மகளிர் நல ஆணையத்தின் வழிகாட்டு தலின் அடிப்படையில் நடைபெற்ற இந்த கருத்தரங்கிற்கு கல்லூரி முதல்வர் முனைவர் ந.அ. அன்பரசன் தலைமை ஏற்றார். முதலில் மொழி வாழ்த்து பாடப்பட்டதைத் தொடர்ந்து பேராசிரியர் மு.ஜோதிபாய் வரவேற்றுப் பேசினார். ஆங்கில துறைத் தலைவர் அ.தேன்மொழி அறிமுக உரை ஆற்றினார். திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி மற்றும் பேராசிரியர் சரஸ்வதி ஆகியோர் சிறப்புரை ஆற்றினர். மாணவிகளின் கேள்விகளுக்கு பதிலளித்த பிறகு, வணிகவியல் ஆராய்ச்சி பட்ட மாணவி இரா.செங்கொடி நன்றியுரை ஆற்ற கூட்டம் நிறைவு செய்யப்பட்டது.

### குமாரபாளையத்தில்

14.2.2013 வியாழக்கிழமை மாலை 6 மணியளவில் குமாரபாளையம் பேருந்து நிலையம் அருகில், இலக்கியத் தளம் சார்பாக காதலர் தின விழா பொதுக் கூட்டம் நடைபெற்றது. ‘ஆதலினால் காதல் செய்வீர்’ என்ற தலைப்பில் நடைபெற்ற இப்பொதுக் கூட்டத்திற்கு தலைமையேற்றார் ச.பாலமுருகன். ஓ. சுபாஷ் வரவேற்புரையாற்றினார். ‘ஆதலினால் காதல் செய்வீர்’ என்ற தலைப்பில் நடைபெற்ற கவியரங்கத்திற்கு பாவலர் நிறைமதி தலைமையேற்றார். நா. அன்பழகன், மதுபாரதி, தமிழி, பொன் மழை, வெங்கடாசலம் ஆகியோர் கவிதை வாசித்தனர். தொடர்ந்து நடைபெற்ற கருத்தரங்கத்திற்கு மூத்த வழக்கறிஞர் ப.பா.மோகன் தலைமையேற்றார். பொன். கதிரவன், ஆ.பகலவன், ச.கண்மணி, கலைமதி, சா.குணசேகரன் ஆகியோர் உரையாற்றினர். இறுதியாக கழகத் தலைவர் கொளத்தூர் மணி சிறப்புரையாற்றினார். ல.மா.செல்வராசு நன்றி கூற கூட்டம் நிறைவுற்றது.

### சேலத்தில்...

17.2.2013 ஞாயிறு காலை 8 மணியளவில் தமிழ்நாடு உதை குத்துச் சண்டை கழகத்தின் சார்பாக சேலம் மாவட்டம் ஓமலூர் அருகே தங்கம் திரையரங்கம் அருகில், பிருந்தாவனம் திரையரங்கம் அருகில், தாராபுரம், புதூர், காமலாபுரம் ஆகிய ஐந்து இடங்களில் புதிய கிளைகள் திறக்கப்பட்டன. அனைத்து இடங்களிலும் கழகத் தலைவர் கொளத்தூர் மணி பெயர்ப் பலகையினை திறந்து வைத்தார். இறுதியாக தங்கம் திருமண மண்டபத்தில் பயிற்சிப் பெற்ற மாணவர்களுக்கு கொளத்தூர் மணி பதக்கம் மற்றும் சான்றிதழ் வழங்கினார்.

### ஈரோட்டில்

17.2.2013 ஞாயிறு அன்று ஈரோட்டு ஏ.இ.டி. பள்ளி வளாகத்தில் விவசாயிகள் வாழ்வாதார மாநாடு நடைபெற்றது. கெயில் நிறுவனத்தின் நில அபகரிப்பை உடனே நிறுத்த வேண்டும், விவசாயிகள் மீதான காவல் துறையின் அடக்குமுறைகளை நிறுத்த வேண்டும் போன்ற கோரிக்கைகளுடன் நடைபெற்ற இந்த மாநாட்டிற்கு பாராளுமன்ற உறுப்பினர் கணேசமூர்த்தி தலைமையேற்றார். திராவிடர் விடுதலைக் கழகம் சார்பாக கழகத் தலைவர் கொளத்தூர் மணி கலந்து கொண்டார்.

மாலை 6 மணியளவில் ஈரோடு கருங்கல் பாளையத்தில் மறைந்த தோழர் மு.மோகன்ராசு (தமிழ்த் தேசிய விடுதலை இயக்கப் பொதுச் செயலாளர்) நினைவேந்தல் நிகழ்வும், தமிழ்த் தேசக் குடியரசு இயக்கம் பொதுக் கூட்டமும் நடைபெற்றது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி கலந்து கொண்டு நினைவேந்தல் உரையாற்றினார்.

### கறம்பக்குடியில்

19.2.2013 செவ்வாய் மாலை 6 மணியளவில் புதுக்கோட்டை மாவட்டம் கறம்பக்குடி அம்புக் கோவில் முக்கம் அருகில் சாதி ஒழிப்புப் பொதுக் கூட்டம் நடைபெற்றது. பெரியார் அம்பேத்கர் மக்கள் கழகம் சார்பாக நடைபெற்ற இந்தப் பொதுக் கூட்டத்திற்கு அவ்வமைப்பின் கறம்பக்குடி ஒன்றிய அமைப்பாளர் கரிகாலன் தலைமை தாங்கினார். மாநில அமைப்பாளர் ரெ.செல்வம் பொதுக் கூட்டத்தின் நோக்கம் குறித்து உரையாற்றினார். கழகத் தலைவர் கொளத்தூர் மணி, மன்னுரிமை கூட்டமைப்பு கடலூர் திருவள்ளுவன் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

### கெய்ல் நிறுவனம் முற்றுகை

26.2.2013 செவ்வாய் காலை 11 மணியளவில் சேலம் ஐந்து ரோடு அருகே கெயில் நிறுவன முற்றுகைப் போராட்டம் நடைபெற்றது. எரிவாயுக் குழாய்களை விவசாய நிலத்தின் வழியாக கொண்டு செல்வதற்கு எதிர்ப்புத் தெரிவித்து இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. எரிவாயு குழாய்களை கொண்டு செல்வதற்கு வேறு பாதைகள் இருந்தும், வலுகட்டாயமாக விவசாய நிலத்தில் அதை பதிப்பதோடு மட்டுமல்லாமல், அதற்கான பாதுகாப்பையும் விவசாயிகளே வழங்க வேண்டும் என்ற நிபந்தனையும் விதிக்கப்பட்டுள்ளது. குழாய் பாதிப்பான பகுதியின் நில உரிமையாளர் மீது வழக்குப் போடும்போது, தான் நிரபராதி என்பதை அவரே நிரூபித்துக் கொள்ள வேண்டும் என்ற விதிமுறையும் உள்ளது என்பதையெல்லாம் சுட்டிக்காட்டி, விவசாய நிலங்கள் வழியாக இந்த குழாய்களை கொண்டு செல்ல வேண்டாம் என்று இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. பாராளுமன்ற உறுப்பினர் கணேசமூர்த்தி தலைமையில் நடைபெற்ற இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில், பொது மக்களுடன் பல இயக்கங்கள் கட்சிகளை சார்ந்தவர்களும் திரளாகக் கலந்து கொண்டனர். திராவிடர் விடுதலைக் கழகம் சார்பாக கழகத் தலைவர் கொளத்தூர் மணி உள்ளிட்ட மாவட்ட ஒன்றிய கழக பொருப்பாளர்களும், தோழர்களும் கலந்து கொண்டனர். அனைவரும் காவல் துறையால் கைது செய்யப்பட்டு, சேலம் இரத்தினவேல் திருமண மண்டபத்தில் அடைக்கப்பட்டனர். மாலை அனைவரும் விடுதலை செய்யப் பட்டனர்.

### சிதம்பரத்தில்...

3.3.2013 ஞாயிற்றுக் கிழமை மாலை 5 மணிக்கு கடலூர் மாவட்டம் சிதம்பரம் ஆர்.கே. அரங்கில் தமிழ்நாடு மாணவர் கழக மாவட்டக் கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது. மாணவர் கழக மாநில அமைப்பாளர் சிவக்குமார் தலைமையில் நடைபெற்ற கூட்டத்திற்கு மதுரை மண்டல அமைப்புச் செயலாளர் சி.ராவணன், நாகை மாவட்டக் கழகச் செயலாளர் தெ.மகேஷ், சீர்காழி நகரக் கழக அமைப்பாளர் பிரபாகரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்நிகழ்வில் மாணவர்களின் சமூகப் பங்களிப்பு மற்றும் மாணவர் கழகத்தின் நோக்கம் ஆகியவை குறித்து திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி உரையாற்றினார். மேலும் மாணவர்களின் சந்தேகங்களுக்கு விளக்கமளித்தார். இடஒதுக்கீடு, தமிழர்-திராவிடர் விளக்கம், அணுஉலை சிக்கல் ஆகியவை குறித்து மாணவர்களின் கேள்விகளுக்கும் விளக்கங்கள் அளித்தார். இறுதியாக பாபு அம்பேத்கர் நன்றி கூறினார். மாணவர்கள் அசோக், கொளத்தூர் பிரவீன், கலைவாணன், தமிழ்மணி, செந்தமிழன், திருமால், பாலமுருகன், மதன்குமார், ராகவன், தீபக், பாரதி உள்ளிட்ட சுமார் 30 பேர் கலந்து கொண்டனர்.

### இலங்கை தூதரகம் முற்றுகை

தமிழீழ இனப்படுகொலை மற்றும் போர்க் குற்றங்கள் மீது சுதந்திரமான ஒரு விசாரணையை நடத்த வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி 4.3.2013 அன்று திங்கட் கிழமை இலங்கைத் துணைத் தூதரகத்தை முற்றுகையிடும் போராட்டம், சென்னையில் அனைத்து அமைப்புகள் சார்பாக நடைபெற்றது. அனைத்து அமைப்புகளைச் சேர்ந்த சுமார் 700க்கும் மேற்பட்டோரை காவல்துறை கைது செய்து ராஜரத்தினம் மைதானத்தில் அடைக்கப்பட்டு மாலை அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர். இந்த முற்றுகைப் போராட்டத்தில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வை.கோ, உலகத் தமிழர் பேரியக்கத்தின் தலைவர் பழ. நெடுமாறன், தமிழக வாழ்வுரிமை கட்சித் தலைவர் வேல்முருகன், நாடு கடந்த தமிழீழ அரசின் நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் சரஸ்வதி, வழக்கறிஞர் பாண்டிமாதேவி, தமிழ் தேசிய விடுதலை இயக்கத்தின் பொதுச் செயலாளர் தியாகு, கவிஞர் தாமரை, வழக்கறிஞர் கனகுறிஞ்சி உள்ளிட்ட பல்வேறு அமைப்புகளைச் சேர்ந்த பொறுப்பாளர்களும், தோழர்களும் கலந்து கொண்டனர்.

### சென்னையில்

1.3.2013 வெள்ளிக் கிழமை மாலை 6 மணியளவில் சென்னை எழும்பூரில் கூடு அமைப்பின் சார்பாக மடியட்டும் மரண தண்டனை முறை பொதுக் கூட்டம் நடைபெற்றது. சட்டக் கல்லூரி மாணவர்கள் ஒருங்கிணைந்த கூடு அமைப்பின் தலைவர் பூங்கா. பாக்கியராஜ் தலைமையேற்றார். திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, தமிழக வாழ்வுரிமைக் கட்சி நிறுவனர் தி.வேல்முருகன் முதலானோர் உரையாற்றினர்.

### புதுவையில்
### மரணதண்டனை விளக்கப் பொதுக் கூட்டம்

2.3.2013 சனிக் கிழமை மாலை 5 மணியளவில் புதுவை மாநிலம் வில்லியனூர் தென்கோபுர வீதியில் புதுச்சேரி தி.வி.க. இளைஞரணி சார்பாக மரணதண்டனை அரசியல் விளக்கப் பொதுக் கூட்டம் நடைபெற்றது. இளைஞரணித் தலைவர் இரா. அன்பெழிலன் தலைமையேற்றார். இரா. இராசா, வெ.இராசா, கி.வேலன், கு.சங்கர் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கா.தேவதாசு வரவேற்புரையாற்றினார். திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, தமிழக வாழ்வுரிமைக் கட்சி நிறுவனர் தி.வேல்முருகன், புதுவை மாநில கழகத் தலைவர் லோகு. அய்யப்பன், அம்பேத்கர் மக்கள் படை சி.மூர்த்தி, இராவணன் படிப்பகம் இர.அபிமன்னன், பெரியார் திராவிடர் விடுதலை கழகத் தோழர் கோகுல் காந்திநாத், தமிழக வாழ்வுரிமைக் கட்சி சி. சிறீதர், செம்படுகை நன்னீரகம் வீர. பார்த்திபன், புதுவை குயில் பாசறை ச. ஆனந்தகுமார் முதலானோர் உரையாற்றினர். சுமார் ஐம்பது இளைஞர்களைக் கொண்ட வில்லியனூர் பகுதியில் இதுவே கழகத்தின் முதல் நிகழ்ச்சியாகும். மாநாடுபோல் திரண்டிருந்த மக்கள் இறுதி வரை இருந்தனர். நாகூர் பகுதியிலிருந்து சுமார் முப்பது புதிய தோழர்கள் கூட்டத்திற்கு வந்திருந்தனர். அனைத்து ஏற்பாடுகளையும் இளைஞரணியை சார்ந்த தோழர்கள் மட்டுமே செய்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. இறுதியாக வில்லியனூர் பகுதி இளைஞரணி அமைப்பாளர் சே. மூர்த்தி நன்றி கூறினார்.

**செய்தி: கோகுல் கண்ணன்**



## ஈரோடு மாநாட்டில் பேராசிரியர் அன்பு செல்வன் விளக்கம்

# மனு சாஸ்திரத்துக்கு மறுப்பாக அம்பேத்கர் உருவாக்கியதே 'இந்து' மசோதா

***2012, டிசம்பர் 24 இல் ஈரோட்டில் திராவிடர் விடுதலைக் கழகம் நடத்திய மாநாட்டு கருத்தரங்கில் பங்கேற்று பேராசிரியர் அன்புச்செல்வன் நிகழ்த்திய உரையிலிருந்து:***

அம்பேத்கரை பொறுத்தவரை இந்து மதங்கள் தொடர்பான விசயங்களிலேயிருந்து, அதன் நேர் எதிர் வழிகளை உணர்ந்த ஒரு அனுபவம் அவருக்குள் இருந்ததால் அவற்றைப் பார்க்கின்ற பார்வையினுடைய அனுபவம் அவருக்கு வேறு விதமானதாக இருந்தது. குறிப்பாக இந்தியாவிற்கு வெளியிலே அவருக்கு ஏற்பட்ட பயண அனுபவங்கள், மீண்டும் இந்தியாவிற்குள் நுழைகின்ற பொழுது ஒரு மனநோயாளியைப் போல இந்த நாட்டிற்குள் நுழைந்து இங்கே இருக்கக் கூடிய இந்த நாடு, இந்த நாட்டின் அமைப்பு முறை, இந்த மக்கள், சமூகச் சூழல் இதை வைத்துக்கொண்டு இங்கே இயங்கிக் கொண்டிருக்கிற ஒரு வகை அரசியல், அதை சார்ந்த பொருளாதாரம் ஆகிய அனைத்தையும் பார்க்கின்ற பொழுது, தீண்டாமை எதிர்ப்புக் கண்ணோட்டம் என்பது அவருக்குள்ளாக ஓடிக்கொண்டிருந்தது.

இந்த நாடு யாருடைய நாடு? இந்த நாட்டிலே இருக்கக் கூடிய கருத்தாடல்கள் எதைச் சார்ந்தது எதனுடைய அடித்தளத்தைச் சார்ந்தது என்பதை பற்றிய பார்வை அம்பேத்கருக்குள் ஓடிக்கொண்டே இருந்ததனால், அவர் தன்னுடைய ஆய்வுகளில் இரண்டு வகையான அணுகுமுறைகளை கையாளுகின்றார். அதிலும் குறிப்பாக இந்து மதம் - இந்து மதத்தினுடைய புதிர்கள், அதனுடைய புராண, வேத, சட்ட, இதிகாசம் அனைத்தையும் அம்பேத்கர் Purpose Analysis என்கின்ற அதனுடைய நோக்க அணுகுமுறைகளைக் கொண்டு கையாளுகின்றார். இராவணனுக்கு பத்து தலை இருந்தது என்று சொன்னால், அவனுக்கு தலைவலி வரும் போது எந்த தலையில் தைலம் தடவுவான் என்று உள்ளே நுழைந்து ஆய்வு செய்துகொண்டிருப்பது, Content Analysis, உள்ளடக்க ஆய்வு. அதிலே அம்பேத்கர் நேரம் செலவிட விரும்புவதில்லை. இவன் இதையே செய்துகொண்டிருக்க வேண்டும், அவன் இதற்குள்ளேயே சுற்றிக் கொண்டிருக்க வேண்டும் இந்த தலையை பற்றியே ஆய்வு செய்து கொண்டிருக்க வேண்டும் அதற்குள்ளேயே சுழல வைக்கும் சுருக்கு வைப்பதை அவர் புரிந்துகொண்டு, அதில் சிக்கிவிடாமல் இருப்பதற்காக, இந்த கதை ஏன் சொல்லப்பட்டது, இந்த நேரத்தில் இராவணனுக்கு பத்து தலை என்று ஏன் சொல்லப்பட்டது என்பதை, அந்த நோக்கத்தை மட்டுமே எடுத்துக்கொண்டுதான் அவருடைய ஆய்வாக பொதுவாக நகர்த்துவார்.

அந்த வகையிலே இந்தியா என்கின்ற நாடு, இந்தியாவிற்கு வெளியே மற்ற கண்டங்களில் இருக்கக் கூடிய நாடு, அங்கே வாழுகின்ற மக்கள், அவர்கள் சார்ந்த இயங்கியலோடு இந்த நாட்டைப் பார்த்து, இங்கே இந்து மதத்தினுடைய மிகப்பெரிய பேரடையாள தொகுப்பாக இருந்த விசயங்களை ஒவ்வொன்றாக பகுத்து ஆராய்ந்து, அதன்மீது தனது ஆய்வு கவனத்தை செலுத்துகின்றார். அந்த வகையிலே அவர் 1927 மார்ச் மாத வாக்கிலேயே இந்த மனுசாஸ்திரத்தைப் பற்றி பேச தொடங்கிவிடுகின்றார். குறிப்பாக அவருடைய தொகுதியிலேயே 7வது பகுதியில் ஆய்வு செய்ய நான் ஏன் தலைப்பட்டேன் என்று சொல்லுகிறார்.

இந்தியா மதங்களின் நாடு; இந்திய அரசியல் வரலாற்றின் முதல் முக்கிய நிகழ்வான கி.மு 642 இல் உருவான, மகத அரசு தான் இந்த நாட்டின் முதல் அரசு என்று அவர் பதிவு செய்கிறார். சிஸ்வநாதர் நிறுவிய மகத அரசை வீழ்த்துவதற்காக, புத்த மத அரசை வீழ்த்த புஷ்யமித்ரன் தலைமையில் சாமவேதி பார்ப்பனர்கள் தொடங்கிய புரட்சிக்கு அடிப்படையாக உருவாக்கப்பட்டதே இந்த மனுஸ்மிருதி என்பது அம்பேத்கர் கருத்து. இந்த நாட்டினுடைய முதல் ஆட்சி அல்லது ஒரு அரசு அது பௌத்த அரசு; அதற்கு எதிராக புஷ்யமித்ரன் தலைமையிலே தொடங்கப்பட்ட, வன்முறையாளர்களான சாமவேத பார்ப்பனர்கள் பற்றிய பார்வையில் இருந்து இந்த மனுஸ்மிருதியின் தோற்றத்தை வரையறை செய்கிறார். மனுஸ்மிருதியில் பௌத்தர்களுக்கும் புத்த மதத்துக்கும் எதிராக பகிரங்கமாக இயற்றப்பட்டுள்ள சட்ட சரத்துகளை, அம்பேத்கர் ஆய்வு வெட்ட வெளிச்சமாக்குகின்றன.

ப்ராகுவா காலத்தில் உருவாக்கப்பட்ட இந்த மனுவை இன்றைக்கு கலியுகத்தில் இருக்கக் கூடியவர்கள் புரிந்துகொள்ள முடியாமல், இது போன்ற மாநாடுகளெல்லாம் நடத்தி இந்த சரத்தைப்பற்றி தவறாக புரிந்து கொண்டிருக்கின்றார்கள் என்று இன்றைக்கு இணைய தளங்களிலே எழுதத் தொடங்கியிருக்கின்றார்கள். இந்த சட்டம் இன்றும் வேண்டும் என்பதை இலைமறை காயாக சொல்லுகிறார்கள். இந்து மதத்தினுடைய குறியீடாக பார்ப்பனீயமும் சரி, பார்ப்பனீயம் சார்ந்த வேதங்களும் சரி, அல்லது இந்த மனுஸ்மிருதியின் தொகுப்பாக இருந்தாலும் சரி, இந்த சமூகத்திலே அது சமத்துவத்தை அங்கீகரிக்கவில்லை; அது ஏற்றத் தாழ்வுகளை உருவாக்கியிருக்கின்றது என்பதை முதல் பதிவாக அம்பேத்கர் வைத்துவிடுகின்றார். அடிமையை அங்கீகரிக்கின்றது; அதிலும் குறிப்பாக வாழ்க்கை உறவு தொடர்பான - திருமணம் தொடர்பான கலப்பு மணம் தொடர்பான விசயங்களை அது மறுக்கின்றது. பார்ப்பான் மிகப்பெரிய அறிவாளி கிடையாது; பார்ப்பானுக்கு அப்படி ஒரு அறிவு இல்லை.

> - **புத்த மத அரசை வீழ்த்த – சாமவேத பார்ப்பனர்கள் உருவாக்கியதுதான் மனுசாஸ்திர தொகுப்பு.**
> - **மக்களின் வாழ்க்கையைக் கட்டமைத்துள்ள 'இந்து' மதத்தையும் அது குடும்பங்கள் வழியாக உயர்த்திப் பிடிக்கும் ஆணாதிக்கத்தையும் தகர்ப்பதற்கு 'மனுசாஸ்திரங்கள்' எரிக்கப்பட வேண்டும்.**

பார்ப்பனர்களுக்கு மிகப்பெரிய அறிவு இருந்திருக்குமேயானால், இந்த நாட்டைப்பற்றி வேறொரு சமூக வடிவத்திலே அவர்களால் சமூக சட்டங்களை கொடுத்திருக்க முடியும். அது அவர்களால் செய்ய முடியாமல் போய்விட்டது. பிரிட்டிஷ் ஆட்சி இந்தியாவுக்கு வந்தபொழுது இங்கே இருக்கக் கூடிய எல்லா விசயங்களும் குறிப்பாக சமூக பண்பாட்டு விசயங்கள் அனைத்தும் - ஒவ்வொன்றும் மீண்டும் மறுவாசிப்புக்கு உட்படுத்தப்பட்டன. ஒவ்வொன்றையும் பகுத்தாய்வு செய்து, எவை ஏற்புடையவை, எவை நீக்கம் பெற வேண்டியவை என்பதை அம்பேத்கர் ஆழமாக யோசித்தார். மனு இவற்றை தொகுக்கின்ற பொழுது இயல்பாகவே பெண்களை விட்டுவிடுகின்றார். அதற்கு ஒரு காரணம் ஜாதி ஆதிக்கம் உருவாவதற்கு முன்பாகவே இந்த உலகில் தோன்றிய ஆதிக்கம் ஆணாதிக்கம். நாம் எப்போதெல்லாம் ஜாதியின் பரிமாணத்தை பேசுகின்றோமோ- படிநிலையைப் பற்றி பேசுகின்றோமோ- அந்த அனைத்து படிநிலைகளிலும் ஆணுக்கு கீழ் பெண்ணை அடிமைப்படுத்தி வைத்திருக்கின்றோம்.

ஏற்கனவே இருக்கக் கூடிய சட்டத்தில் குறிப்பாக ஆணாதிக்கம் என்பது மிக முக்கியமான ஒரு விசயம்; அதைப்பற்றி பெரிய அளவிலே பேசுவது கிடையாது. இன்றைக்கு தருமபுரி நிகழ்வை பற்றி குறிப்பிடுகின்ற பொழுது ஜாதி ஆதிக்கத்தோடு - அதை விட வலுவான இடத்திலே ஆணாதிக்கம் தனக்கான பாத்திரத்தை கைப்பற்றியிருக்கின்றது என்பது மிக ஆபத்தானது. என் மகளோ, என் சகோதரியோ அல்லது நான் பார்க்கின்ற பெண்ணோ, அவள் எந்த ஆணோடு வாழ வேண்டும் - உறவுகொள்ள வேண்டும் என்பதை ஒரு ஆண் தான் இங்கு கண்டு பிடித்து பேசவேண்டிய சூழல் இருக்கின்றது. ஒரு முப்பது நாற்பது ஆண்டுகளுக்கு முன்னால் ஐரோப்பாவிலே ஆண்களை மிகக் கடுமையாக விமர்சனம் செய்த பெண்ணியவாதிகளெல்லாம் சற்றேறக்குறைய இது போன்ற எழுதப்படாமலேயும் எழுதப்பட்டும், செயல்படாமலேயே செயல்படுத்தப்பட்டும் இருந்த, இது போன்ற ஸ்மிருதிகளைத் தான் மிகக் கடுமையாக விமர்சனம் செய்தார்கள். அந்த வகையில்தான் அம்பேத்கர் தொடங்கிய மனுசாஸ்திர எரிப்பு என்கின்ற நிகழ்ச்சி, சிவில் உரிமை சமூகத்தின் வெளிப்பாடாகவும் இருக்கவேண்டும் என்பதை அவர் மகத் குள போராட்டத்தோடு இணைத்துப் பார்க்கின்றார்.

ஒவ்வொரு ஆண்டும் இதே நாளில் குஜராத்தில் அகமதாபாத்திலும், அல்லது மகாராஷ்டிராவில் இரத்தினகிரி மாவட்டத்திலும் அல்லது இன்றைக்கு தமிழகத்திலே நாம் நடத்திக்கொண்டிருக்கின்ற ஈரோடு போன்ற இடங்களிலும் இந்த மனுஸ்மிருதி எரிக்கப்படவேண்டும் என்பது இந்து பேரடையாளத்தையும் அது தூக்கி சுமந்திருக்கக் கூடிய ஆணாதிக்கம் என்ற பிம்பத்தையும் வீழ்த்தக் கூடியதாகும். எனவேதான் அம்பேத்கர் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தினுடைய வரைவை எடுக்கின்றபொழுது இந்து சட்ட மசோதாவை மிக முக்கியமான அம்சமாக வைக்கின்றார். இந்த இந்து சட்ட மசோதாவினுடைய எல்லா அம்சங்களையும் வாசிக்கின்றபொழுது அதிலே சொல்லப்படுகின்ற விசயங்கள், சொத்துரிமை தொடர்பாகவோ, திருமணங்கள் தொடர்பாகவோ, சமூகத்தில் பெண்கள் வாழ்வதற்கான உரிமைகள் பற்றி சொல்வது எல்லாமே மனுவினுடைய சாத்திரத்திற்கான மறுப்பு ஒவ்வொரு இடங்களிலேயும் ஊடிழையாக பின்னிக் கொண்டே சென்று கொண்டிருக்கின்றது. அம்பேத்கர் கண் கலங்கினார் என்று சொல்லக் கூடிய இடமே இந்த இந்து சட்ட மசோதாவை அன்றைய நாடாளுமன்ற குழுவில் ஏற்றுக்கொள்ளப்படாமல் புறக்கணிக்கப்பட்ட போதுதான். அந்த வகையில் இன்றைக்கு இந்தியாவினுடைய ஒரு ஓர்மை பண்பாட்டினுடைய மதரீதியான விசயங்களோடு ஆணாதிக்கம் மீண்டும் இந்த மனுசாஸ்திரத்தை தன்னுடய அதிகார பூர்வமான குறியீடாக செயல்பாட்டிலே வைத்திருக்கின்றது; இன்றைக்கு நம்முடைய வீடுகளிலே வேண்டுமானால் மனுசாஸ்திரம் இல்லை; திருலோக சீதாராம் தமிழிலே மொழிபெயர்த்த நூல் நம்மிடையே இல்லை; அதை பற்றி விளக்கமாக எழுதப்பட்ட அருணன் அவர்களின் நூல்களும் நம் வீடுகளில் இல்லை. ஆனாலும் அவை இத்தனை ஆண்டுகளாக நமக்கு உமிழ்ந்து சென்றிருக்கக் கூடிய - கதிர்வீச்சாக கக்கிச் சென்றிருக்கக் கூடிய செயல்பாடுகள் எனக்குள்ளும் உள்ளூர ஊடுருவி நிற்கின்றது. அதனால் தான் நானும் இன்றைக்கு ஒரு மனுவை போல் செயல்படுகின்றேன். ஏதோ ஒரு வகையில் இந்த சாஸ்திரத்தை நான் செயல்படுத்தக் கூடியவனாக இருக்கின்றேன். இது ஏதோ பல நூறு ஆண்டுகளுக்கு முன்னால் உருவாக்கப்பட்டது அதனால் எரித்துவிட வேண்டும் என்பது மட்டுமல்ல. அல்லது இதை அம்பேத்கர் விமர்சித்துவிட்டார் - பெரியார் விமர்சித்துவிட்டார் என்பதற்காக மட்டுமல்ல. மாறாக அவர்கள் இருவரும் இந்த இந்திய சமூகச் சூழலிலே மிகப்பெரிய ஒரு உடைப்பை ஏற்படுத்துவதற்காக தொடங்கப்பட்ட இந்த குறியீடு ஒரு எதிர் கலாச்சார புரட்சி, இந்து மதம் என்கின்ற மிகப் பெரிய பேரடையாளத்தை தகர்க்கக் கூடியதாகவும், அதையொட்டி இருக்கக் கூடிய ஆணாதிக்கத்தையும் தகர்க்கக் கூடியதாகவும் இருக்கவேண்டும்.

ஏனென்றால் இவை இரண்டில்தான் நாம் எதிர்பார்த்துக்கொண்டிருக்கக் கூடிய - நம்மை அறியாமலேயே கவனத்தில் - கிடப்பில் போடப்பட்டிருக்கக் கூடிய ஜாதி என்பது உழன்று கொண்டிருக்கின்றது. அம்பேத்கர் அதை உடைப்பதற்கான வேலையைத் தான் நம் கைகளிலே கொடுத்திருக்கின்றார். ஆணாதிக்கம் என்பது மிக வலுவான கட்டமைப்பிலே சவுகரியமாக இன்றைக்கு உட்கார்ந்துகொண்டிருக்கின்றது இன்னும் கூட மனு சாஸ்திரம் பற்றி தலித்துகள் பெரிய அளவில் பேசுவது கிடையாது. காரணம் இது தலித்துகளைப் பற்றி அல்லது ஆதி சூத்திரர்களைப் பற்றி அல்லது பஞ்சமர்களைப் பற்றி பெரிய அளவில் பேசாததினால் இது ஏதோ சூத்திரர்களுக்கு மட்டும் விதிக்கப்பட்ட கடமையாக அல்லது இது ஏதோ பெரியார் இயக்கங்கள் மட்டும் முன்னெடுத்து

4 ஆம் பக்கம்

DATE OF PUBLICATION 14.03.2013
PURATCHI PERIYAR MUZHAKKAM
TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/12-14
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/7776

# டப்ளினிலிருந்து ஜெனிவா வரை... சென்னையில் கழகம் நடத்திய கருத்தரங்கம்

அய்.நா.வில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டு வர இருக்கும் தீர்மானத்தால் ஈழத் தமிழர்களின் உரிமைகளுக்கான முழுமையான தீர்வுகள் கிடைத்து விடப் போவதில்லை என்றாலும், இலங்கைக்கு எதிரான சர்வதேச செயல்பாடுகளை நாம் நிராகரித்து விடாமல், அதைப் பற்றிக் கொண்டு, மேலும் முன்னெடுக்க கருத்துரு வாக்கங்களை, நிர்ப்பந்தங்களை உருவாக்க வேண்டும் என்று சென்னையில் திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் நடத்திய கருத்தரங்கில் கழக சார்பில் வலியுறுத்தப்பட்டது. ‘அமெரிக்க தீர்மானத்தையே எதிர்க்கிறோம்’ என்ற முழக்கங்களால் இனப்படுகொலையாளன் ராஜபக்சே முன் வைக்கும் கருத்துகளுக்கு வலிமை சேர்க்கும் ஆபத்துகள் இருப்பதையும் கருத்தரங்கம் சுட்டிக் காட்டியது.

“ஈழ விடுதலைப் பயணத்தில் தடைகளும் நகர்வுகளும்; டப்ளின் தொடங்கி ஜெனிவா வரை..” எனும் தலைப்பில் சென்னை மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகம், 11.3.2013 அன்று மாலை கருத்தரங்கம் ஒன்றை நடத்தியது. ஈழத்தில் நடந்தது, இனப்படுகொலை என்பதையேற்று, தமிழ் ஈழத்துக்கு பொது வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்று கருத்தரங்கம் வலியுறுத்தியது. தியாகராயர் நகர் சி.டி.நாயகம் மேல்நிலைப் பள்ளி அரங்கில் நடந்த கருத்தரங்கில், பூங்குழலி டப்ளின் தீர்ப்பாயம் மற்றும் அய்.நா. மூவர் குழு அறிக்கையில் இடம் பெற்றிருந்த போர்க் குற்றங்கள் பற்றியும், மே 17 இயக்கத்தைச் சார்ந்த திருமுருகன் காந்தி - அய்.நா. செய்த துரோகங்களையும்; விடுதலை இராசேந்திரன் - ஈழத்தில் இனப் படுகொலைகள் நடந்தபோதும், அவை மறைக்கப்படுவது குறித்தும்; தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழகத் தலைவர் பேராசிரியர் ஜவாஹிருல்லாஹ் - போர்க்குற்றங்கள் குறித்தும்; கொளத்தூர் மணி - பொது வாக்கெடுப்பு நடத்த வேண்டிய அவசியம் குறித்தும் விரிவாக பல்வேறு செய்திகளை எடுத்துரைத்தனர். ஒவ்வொருவரும் தங்களுக்கான தலைப்புகளின் கீழ் ஆழமான கருத்துகளையும் தகவல்களையும் முன் வைத்தனர். முன்னதாக தோழர் அருள்தாசு, கொள்கைப் பாடல்களைப் பாடினார். உடுமலை தமிழ்ச் செல்வன் வரவேற்றுப் பேசினார்.

## நன்கொடை

திருப்பத்தூர் பெரியார் முழக்க வாசகர் இரா. பகுத்தறிவாளன், கவிஞர் தமிழேந்தி வழியாக கழக ஏட்டுக்கு ரூ.1000 நன்கொடை வழங்கினார்.

சென்னை, புளியந்தோப்பு, கேசவன் பூங்கா குடியிருப்பில் வசிக்கும் கழகத் தோழர் ஏ.விஜயன்-அன்னலட்சுமி இணையர் 2.3. 2013 அன்று தம் மண நாள் நிகழ்வாக ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ வளர்ச்சி நிதியாக ரூ.1000 நன்கொடையை கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரனிடம் சென்னை மாவட்டக் கழகக் கலந்துரையாடல் கூட்டத்தில் வழங்கினர். (நன்றியுடன் பெற்றுக் கொண்டோம்.)

முதல் பக்கத் தொடர்ச்சி

கருகட்டும்” எனும் தலைப்பில் கவிஞர் கொழுமம் ஆதி தலைமையில் நடைபெறும் பாவரங்கத்தில், அனுப்பட்டி பிரகாசு, ம.நேரு தாசு, பாரதிவாசன், கிரிஜா, விக்னேசு ஆகியோர் கவிதைகளை வழங்குகிறார்கள். தொடர்ந்து கழகப் பரப்புரைச் செயலாளர் பால். பிரபாகரன் தலைமையில் “மனு சாஸ்திரத்தை அதிகமாக பின்பற்றுவது அரசுகளா? மக்களா?” என்ற தலைப்பில் பட்டிமன்றம் நடைபெறுகிறது. “அரசுகளே” எனும் தலைப்பில் மலரினியன், ஜெய்சாந்தி, நீதிராசன் ஆகியோரும், “மக்களே” எனும் தலைப்பில் நிர்மல்குமார், பெரியார் செல்வி, சிலம்பரசன் ஆகியோரும் வாதிடுகிறார்கள்.

மாலை 4 மணிக்கு சிவானந்தா காலனியிலிருந்து ஜாதி ஒழிப்புப் பேரணி, திருப்பூர் மாவட்ட கழகத் தலைவர் சு.துரைசாமி தலைமையில் புறப்படுகிறது. கழகப் பொருளாளர் இரத்தினசாமி கொடி அசைத்து தொடங்கி வைக்கிறார்.

வி.கே.கே. மேனன் சாலையில், ஜாதி ஒழிப்புப் போராளிகள் அண்ணாமலை-திருமூர்த்தி திடலில், சுயமரியாதை கலை, பண்பாட்டுக் கழகத்தினரின் பறை முழக்கத்தோடு பொது மாநாடு தொடங்குகிறது. மேட்டூர் கருப்பரசன் குழுவினர் வழங்கும் வீதி நாடகம் நடைபெறுகிறது. தொடர்ந்து சாதி வெறிக்கு உயிர்ப் பலியான செகுடந்தாளி முருகேசன் பற்றிய குறும்படம் வெளியிடப்படுகிறது. தொடர்ந்து 1958 ஆம் ஆண்டு சட்டத்தை எரித்து சிறைச் சென்ற ஜாதி ஒழிப்புப் போராளிகள் ஆறுமுகம், காளிமுத்து ஆகியோருக்கு சிறப்பு செய்யப்படுகிறது.

கோவை மண்டல அமைப்புச் செயலாளர் பல்லடன் விஜயன் தலைமையில் மாநகர மாவட்ட தலைவர் வழக்கறிஞர் ந. பன்னீர்செல்வம் வரவேற்புரையுடன் பொது மாநாடு தொடங்குகிறது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி, முன்னாள் மத்திய அமைச்சர் எ. பொன்னுசாமி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சட்டமன்ற உறுப்பினர் க. பாலபாரதி, எழுத்தாளர் மனுஷ்யபுத்திரன், வழக்குரைஞர் ஆர்த்தி, பொன் சந்திரன், எழுத்தாளர் பாமரன், எஸ்.டி.பி.அய். பொறுப்பாளர் அப்துல்காதர், கழக வெளியீட்டுச் செயலாளர் சூலூர் தமிழ்ச் செல்வி, வெண்மணி (தமிழர் விடுதலை இயக்கம்), விடுதலை இராசேந்திரன் ஆகியோர் உரையாற்றுகிறார்கள்.

சுவரெழுத்துகள், மாநாட்டு விளம்பரங்கள், பரப்புரைகள் பற்றி கோவையில் பரபரப்பாக பேசப்படுகிறது. சிறப்பான சுவரெழுத்து விளம்பரங்களைப் பார்த்து கொள்கை ஆர்வலர்கள் கழகத் தோழர்களிடம் அலைபேசி வழியாக பாராட்டுகளைத் தெரிவித்து வருகிறார்கள்.

**– நமது செய்தியாளர்**

**தோழர்களே! ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ ஏட்டுக்கு ஆண்டுக் கட்டணம் ரூ.200/– உறுப்பினர்களை சேர்க்கும் பணியை தீவிரப்படுத்துங்கள்!**

# பெண்கள் ஜாதி – ஆணாதிக்கத்துக்கு எதிராக சமூக மாற்றத்தை முன்னெடுக்க வேண்டும்

3 ஆம் பக்கத் தொடர்ச்சி

செய்யக்கூடிய வேலைத் திட்டமாக இன்றைக்கு மாறிவிட்ட ஒரு அபாயம் இந்த மண்ணிலே நேர்ந்துவிட்டது.

இந்தப் போக்கு அது நாம் எதிர்கொள்ள வேண்டிய பார்ப்பனீயத்துக்கு - நாம் எதிர்கொள்ள வேண்டிய ஜாதி ஒழிப்புக்கு - நாம் எதிர்கொள்ள வேண்டிய ஆணாதிக்க வேரறுப்பிற்கு எதிரானதாக அமைந்துவிடக் கூடும் என்பதையும் நாம் இந்த நேரத்திலே அடையாளம் கண்டு கொள்ள வேண்டும். அந்த வகையில் இன்றைக்கு திராவிடர் விடுதலைக் கழகம் உருவாக்கியிருக்கக் கூடிய இந்த மாநாடு நம்முடைய கிராம மக்களிடத்திலேயும் கொண்டு செல்லப்பட வேண்டும். அதை முன்னெடுத்துச் செல்வதற்கு இது போன்ற அரங்குகளிலே நிச்சயமாக பெண்கள்தான் இனி இந்த நாட்டினுடைய அரசியலையும் இந்த நாட்டினுடைய சமூக புரட்சிக்கான எதிர் கலாச்சார குறியீடுகளையும் உருவாக்கக் கூடிய ஒரு மாற்று சக்தியாக முன்வர வேண்டும்.

குடும்பம் என்ற அமைப்பின் மீது மிகப் பெரிய கேள்வியை மனு தொடங்கி வைத்திருக்கின்றார். காரணம் ஆணாதிக்கத்தினுடைய மிக முக்கியமான மகுடமாக இருக்கக்கூடிய ஒரு இடமாகத் தான் குடும்பம் இருக்கின்றது. ஆனால் அந்த குடும்பம் ஒரு வேறு வைகையான நல்ல பலன்களை நமக்கு தருவதாக எடுத்துக் கொண்டாலும் கூட அதிலிருந்து வேறு விதமான மாற்று குடும்பமுறை தேவைப்படுகின்றது. இந்த மாநாட்டு அரங்கமே இன்றைக்கு ஒரு மாற்றுக் குடும்பம்தான்; ஒரு கம்யூன்தான்; சமூகத்தில் நிலவும் குடும்ப அமைப்பு முறைக்கு உள்ளேதான் இது போன்ற மோதல்களும், வன்முறைகளும், இந்த மனு சட்ட விதிகளை செயல்படுத்துகின்ற சிறிய அளவிலான இடங்களும் கிடைத்திருக்கின்றது எனவே இந்த குடும்ப அமைப்பு முறை தகர்க்கப்பட வேண்டும் என்று சொன்னால் அதற்கான ஒரு மாற்றை நாம் நிறுவவேண்டும். சில இடங்களிலே மத ரீதியான தளங்களிலே வேறு வகையான ஆசிரம முறைகள் பற்றியெல்லாம் இன்றைக்கு பேசுகின்றார்கள். அவைகூட இன்றைக்கு பெண்கள் மீதான பாலியல் சுரண்டல்களையும் அல்லது ஊழல்களையும் மையமாக வைத்த முறைகளாகத்தான் இருக்கின்றன. வேறுவிதமான ஒரு பண்பாட்டுக் கூடலை மையப்படுத்திய ஒரு குடும்ப உறவுமுறை இன்றைக்கு தேவைப்படுகின்றது. குறிப்பாக திருமண முறையை இரத்து செய்கின்ற அல்லது அதை தவிர்த்துவிட்டு வேறு ஒரு மாற்றை தீர்மானிக்கின்ற ஒரு இடத்தைப் பற்றியும் நாம் இன்றைக்கு ஆய்வு செய்யவேண்டிய தேவை இருக்கின்றது. ஏதோ மனு சொல்லிவிட்டார் என்பதற்காக அல்லது சூத்திரர்கள் வைசியர்களை பார்க்கவேண்டாம் அல்லது வைசியர்கள் பார்ப்பனர்களை பார்க்கவேண்டாம் என்கின்ற அந்த கண்ணோட்டத்தில் மட்டுமே அல்ல. மாறாக ஆண்களே இந்த குடும்பத்தினுடைய அதிகார அமைப்பு முறையில் இருந்து தங்களை கீழ் இறக்கிக்கொள்ளக் கூடியவர்களாக அல்லது அதிலேயிருந்து சற்று வெளியேறக் கூடியவர்களாக இருக்கக்கூடிய ஒரு நிலைக்கு நாம் தள்ளப்பட்டிருக்கின்றோம் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு ஐரோப்பாவிலே பெண்கள் ஆண்களை திருமணம் செய்துகொள்ளவில்லை என்ற முடிவை எடுத்தார்கள். மேரி டாலியை பற்றி நாம் வாசிக்கின்றோம்; அலைஸ் வாக்கரைப் பற்றி நாம் வாசிக்கின்றோம்; கருப்பர்களுடைய போராட்டங்களிலே, அவர்களுடைய அந்த குடும்ப அமைப்பு முறைகளிலே ஆணாதிக்க முறை என்பது இதே மனுசாஸ்திர அடிப்படையில் இதை விட கேவலமாக இருந்தது. ஆனால் அதையெல்லாம் நியாயப்படுத்துகின்ற சட்ட ஒழுங்குகளும் பண்பாட்டு நடைமுறைகளும்தான் இன்றைக்கு நம்முடைய சமூக சூழலிலும் இருந்து கொண்டிருக்கின்றது. சென்னையிலே டேனியல் அவர்கள் தமிழகத்திலே ஒவ்வொரு மாவட்டத்திலும் ஏற்படுகின்ற விவாகரத்து - மணமுறிவை பற்றி அவருடைய முனைவர் பட்ட ஆய்விலே சொல்லக்கூடிய இருபது வகையான காரணங்களிலே மிக முக்கியமான காரணமாக குறிப்பிடுகின்ற இடம் ஆணாதிக்கம் முதல் இடத்தை வகிக்கின்றது. இன்றைக்கு உரு வாகியிருக்கின்ற சினிமா கலாச்சாரமாக இருந்தாலும் அல்லது வேறு விதமான கலாச்சாரமாக - தொழில்நுட்ப கலாச்சாரமாக இருந்தாலும் எல்லாமே மனு குறிப்பிட்டு இருக்கக்கூடிய ஒவ்வொரு அடிப்படை சாராம்சத்தையும் சார்ந்திருக்கின்றது. அந்த இடத்தை உடைப்பதற்கு அம்பேத்கரும் பெரியாரும் இந்த நாட்டில் மிகப்பெரிய களப்பணி ஆற்றியிருக்கின்றார்கள். எனவே மனுஸ்மிருதியை எதிர்க்கவேண்டும் மனுசாஸ்திரத்தை எரிக்கவேண்டும் அம்பேட்கரிய இயக்கங்களும், பெரியாரிய இயக்கங்களும் இணைந்து எரிக்கவேண்டும் அந்தப் பணியை செய்வதற்கு இந்த மாநாடு ஒரு குறியீடாக அமைந்திருக்கின்றது. அது தொடரவேண்டும் என்பதை மட்டும் நான் கூறி உங்களிடமிருந்து விடைபெறுகின்றேன்.

**“புரட்சிப் பெரியார் முழக்கம்”**
**ஆண்டுக்கட்டணம் ரூ.200/–**
**தொடர்புக்கு:**
ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41.
✆ 99416 13535

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 15th March 2013

OWNER & PUBLISHER & EDITOR : K. RAJENDRAN, PUBLISHED AT 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.

புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com
ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2044 | மார்ச் 21, 2013 | புரட்சி 12 | முழக்கம் 10 | விலை: ரூ.3.00

## மாநாடு மகத்தான வெற்றி

# முத்திரை பதித்தது கோவை



***“தமிழர் ஒற்றுமை”க்கான ஜாதி – தீண்டாமை ஒழிப்பு மாநாடு சென்னை, சேலம், திண்டுக்கல், திருவாரூர், திருநெல்வேலியைத் தொடர்ந்து 6 ஆவது மண்டல மாநாடு கோவையில் மார்ச் 18 இல் காலை தொடங்கி இரவு வரை திராவிடர் விடுதலைக் கழக சார்பாக எழுச்சியுடன் நடைபெற்றது.***

*மாநாட்டையொட்டி கோவை மாநகரம் முழுதும் கழகச் செயல்வீரர்கள் செய்திருந்த வண்ண மயமான சுவரெழுத்து - தீண்டாமைக் கொடுமைகளை விளக்கிடும் படங்களோடு அமைக்கப்பட்டிருந்த ஓவியப் பதாகைகள், வட்டமாக டயர்களைப் பயன்படுத்தி ஏராளமாக அமைக்கப்பட்டிருந்த மாநாட்டு விளம்பரங்கள், வீதிகளில் பறந்த கழகக் கொடிகள் பிரமிப்பையூட்டுவதாக இருந்தன. “அரசியல் கட்சிகளால்கூட இவ்வளவு பெரிய அளவில் செய்திருக்க முடியாது” என்று சில அரசியல் கட்சி பொறுப்பாளர்களே கழகத் தோழர்களிடம் நேரிலும் அலைபேசி வழியாகவும் வியந்து பாராட்டுகளைத் தெரிவித்தனர். இடைவிடாமல் 45 நாட்கள் கழகத்தின் இளைஞர், மாணவர் தோழர்கள் இரவு பகலாக உழைத்து இந்தப் பணிகளை சிறப்புடன் செய்து முடித்தனர்.*

*2 ஆம் பக்கம்*

# ‘சூத்திர-பஞ்சமர்’களை அழிக்க வந்த ‘மனு அஸ்திரம்’

*முதல் பக்கத் தொடர்ச்சி*

கோவையில் அனைத்து வணிக நிறுவனங்களுக்கும் சென்று 40,000 மாநாட்டு துண்டறிக்கைகளை விநியோகித்து, நன்கொடைகளை திரட்டினர். கோவையில் திரும்புமிடமெல்லாம் மாநாட்டு விளம்பரங்களாகக் காட்சி அளித்தன.


காலை 11 மணியளவில் காஞ்சிபுரம் சீனிவாசா மாநகராட்சி மண்டபத்தில் சுவரெழுத்து சுப்பையா அரங்கில் மேட்டூர் டி.கே.ஆர். குழுவினரின், ஜாதி ஒழிப்புப் பாடல் இசை நிகழ்ச்சியுடன் நிகழ்ச்சிகள் தொடங்கின. கோவை மாவட்டக் கழகக் காப்பாளர் மேட்டுப்பாளையம் இராமச்சந்திரன் கழகக் கொடியை ஏற்றி வைத்தார். மாநாட்டு மண்டப வளாகத்தில் கழகத்தின் முன்னணி அமைப்பான அறிவியல் மன்றத்தின் சார்பில், அதன் பொறுப்பாளர்கள் ஆசிரியர் திருப்பூர் சிவகாமி, ஆசிரியர் சிவக்குமார் மற்றும் தோழர்கள் இணைந்து மாநாட்டு அரங்க வளாகத்தில் தோழர் பழனி நினைவரங்கில் அறிவியல் கண்காட்சி அமைத்திருந்தனர். தர்மபுரியில் சாதி வெறியர்கள் தலித் மக்கள் மீது நடத்திய கலவரங்களின் புகைப்படக் கண் காட்சியும் பார்வைக்கு வைக்கப்பட்டது. அறிவியல் கண்காட்சியை தமிழ்நாடு மாணவர் கழக கோவை மாவட்ட அமைப்பாளர் பிரதாப் தலைமையில் ஈரோடு மண்டல அமைப்புச் செயலாளர் இராம. இளங்கோவன் திறந்து வைத்தார்.

மாவட்ட செயலாளர் கோ. பால முரளி வரவேற்புரையாற்ற மாநாட்டைத் தொடங்கி வைத்து, ‘தலித் முரசு’ ஆசிரியர் புனித பாண்டியன் சிறப்பான உரை நிகழ்த்தினார். பெரியார்-அம்பேத்கர் கொள்கை வழியில் ஜாதி எதிர்ப்பு இயக்கத்தை நடத்திச் செல்லும் ஒரே இயக்கம் தமிழ்நாட்டில் திராவிடர் விடுதலைக் கழகம்தான் என்று தனது உரையில் குறிப்பிட்டார். (உரை தனியே வெளிவரும்)

தொடர்ந்து, “நான் எரிப்பேன் மனுசாஸ்திரத்தை” எனும் தலைப்பில், கழகத்தின் மூத்த தோழர் மடத்துக்குளம் மோகன் தலைமையில் கருத்தரங்கம் நடைபெற்றது. கழகத் தோழர்களே பங்கேற்றுப் பேசிய கருத்தரங்கம், கருத்துச் செறிவுடன் மனுசாஸ்திரத்தின் பார்ப்பனிய பாசிசக் கருத்துக்களை அக்குவேறு ஆணிவேறாக அலசிக் காட்டியது. ‘நான் எரிப்பேன் மனுசாஸ்திரத்தை-ஒரு மனிதநேயனாக’ எனும் தலைப்பில் பேசிய இளஞ்செழியன் , மனுசாஸ்திரம் சூத்திரர்களின் உடல் உறுப்புகளை அறுத்து எறிய வேண்டும் என்று விதித்துள்ள கொடூரமான சித்திரவதை தண்டனைகளை பட்டியலிட்டார். ‘யாதும் ஊரே யாவரும் கேளிர்’ என்று மனித சமத்துவத்தை முழங்கிய தமிழர் பண்பாட்டுக்கு முற்றிலும் முரண்பட்டு நிற்கும் ‘மனு சாஸ்திரம்’, ஈழத்தில் தமிழர்கள் மீது சிங்கள ராணுவம் நடத்திய படுகொலைகள், பாலுறவு வன்முறைகள், சித்திரவதைகளைப்போல் பார்ப்பனர்களால் ‘சூத்திர-பஞ்சம’ மக்கள் மீது ஏவப்பட்ட கொடூர சமூக வன்முறைதான் ‘மனுசாஸ்திரம்’ என்றார். அது ‘மனு சாஸ்திரம்’ அல்ல; ‘சூத்திர-பஞ்சம’ மக்கள் மீது மனு தொடுத்த ‘மனு அஸ்திரம்’ (அழிக்கும் ஆயுதம்); அது ‘மனுதர்மம்’ அல்ல; ‘மனு அதர்மம்’ என்றார்.

“சமத்துவ விரும்பியாக எரிப்பேன்” என்ற தலைப்பில் பேசிய வெள்ளமடை நாகராசன், பெயர் சூட்டுவதில்கூட ‘மனு சாஸ்திரம்’ இருப்பதை சுட்டிக் காட்டினார். “பார்ப்பனராக இருந்தால் சுப்பிரமணியசாமி, ‘சூத்திரனாக’ இருந்தால் இதே பெயர் ‘சுப்பிரமணி’; பஞ்சமனாக இருந்தால் ‘சுப்புனி’ என்றிருக்கும். பார்ப்பானோடு சூத்திரன் சமமாக உட்கார்ந்தால் அவன் உட்காருமிடத்தை வெட்டி எறிய வேண்டும் என்று மனுசாஸ்திரம் கூறுகிறது. முருகேசன் என்ற அருந்ததியர் பேருந்தில் ஒரு ஆதிக்கசாதியினருக்கு அருகே அமர்ந்தார் என்பதற்காக முதலில் அவரைத் தாக்கி, பிறகு வீட்டிலிருந்து அழைத்துச் சென்று அடித்தே கொன்றார்கள். அடித்தவனுக்கு ‘மனு சாஸ்திரம்’ தெரியாது. இறந்தவருக்கும் ‘மனு சாஸ்திரம்’ தெரியாது. ஆனால், அந்த சாஸ்திரம் என்ன எழுதி வைத்துள்ளதோ, அதுவே சமூகத்தின் வாழ்க்கையாக மூளையில் ஏற்றி வைத்துக் கொண்டிருக்கிறார்கள். கடவுளிடம் நெருங்கும் உரிமை பிறவியின் அடிப்படையில் “பிராமணர்”களுக்கு மட்டுமே உண்டு என்ற ‘மனு சாஸ்திரம்’ பார்ப்பானை தவிர வேறு வர்ணத்தவர் - அவர்கள் எவ்வளவு படித்தவர்களாக இருந்தாலும் அர்ச்சகராக முடியாமல் இன்று வரை உச்சநீதி மன்றங்களாலேயே தடுக்கப்பட்டு வருகிறது”, என்றார் வெள்ளமடை நாகராசு.

‘ஒரு பெண்ணாக - மனு சாஸ்திரத்தை எரிப்பேன்’ என்று பேசிய ஆசிரியர் திருப்பூர் சிவகாமி, பெண்களை இழிவுபடுத்தி, மனு தனியே ஒரு அத்தியாயத்தையே எழுதி வைத்திருப்பதை சுட்டிக் காட்டினார். பெண்கள் வீட்டில் அடிமைகளாக வேலை செய்வதோடு, அவர்களின் கடமைகளை முடக்கிப் போடும் மனுசாஸ்திரம், ஒரு ஆண், தனது தாய், சகோதரியோடுகூட தனியே உட்கார்ந்து பேசக் கூடாது. பெண்கள் ஆபத்தானவர்கள் என்று கூறுவதை எடுத்துக் காட்டினார். பெண்களுக்கான மனு சாஸ்திரம் விதித்த அடிமைக் கட்டளைகளை தகர்த்து எறிந்து, நாட்டின் விடுதலைக்காக துப்பாக்கி ஏந்தி எதிரிகளை களத்தில் சந்தித்த ஈழத்து பெண் புலிகள் மனு சாஸ்திரத்தை தூக்கி எறிந்தவர்கள் என்று பெருமையுடன் குறிப்பிட்டார். பெண்கள் அடிமையிலிருந்து விடுபடுவதற்கு அலங்காரம் வேண்டாம்; நகைகள் வேண்டாம்; கல்வியைப் பெறுங்கள் என்று பெரியார் கூறிய மூன்று முன் நிபந்தனைகளை சுட்டிக்காட்டிய ஆசிரியர் சிவகாமி, உண்மையான சமூக



காலை கருத்தரங்கம்




மாற்றம் - பெண்கள் நடத்தும் போராட்டங்களால்தான் வர முடியும் என்றார்.

‘நான் எரிப்பேன் - மனுசாஸ்திரத்தை - ஒரு தொழிலாளியாக’ என்ற தலைப்பிலேயே அ.ப.சிவா, ‘செய்யும் தொழிலே தெய்வம்’ என்ற சொல்லடைவே மனுசாஸ்திரத்தின் மறுமொழிதான் என்றார். ‘கருவறைக்குள்’ அர்ச்சகராக உள்ள தொழில் பார்ப்பானுக்கு ‘தெய்வமாக’ இருக்கலாம்; கழிவறையில் மலம் எடுக்கும் ஒரு தலித் செய்யும் இழிவான வேலையை ‘தெய்வமாக’ப் போற்றிட முடியுமா? ‘கருவறையும் கழிப்பறையும்’ சம மதிப்புள்ளவை தானா? ஜப்பான் நாட்டில் கழிப்பறையை தூய்மைப்படுத்துதல் என்பதுகூட ஒரு தொழில்தான். அங்கே ஒரு ஜாதிக்கு மட்டும் இந்த தொழில் கிடையாது. கழிப்பறையை தூய்மை செய்யும் பணியாளர்கள் ஜப்பான் நாட்டில் ‘சுகாதாரப் பொறியாளர்கள்’ என்று அழைக்கப்படுகிறார்கள். ஜப்பானில் தாய்மொழியில் கல்வி இருப்பதை சுட்டிக்காட்டும் தமிழ் தேசியவாதிகள், இந்த கழிப்பறைத் தூய்மைப்பணி - ஒரு தொழில்நுட்பமாகப்பட்டிருப்பதை சுட்டிக் காட்டுவதில்லையே ஏன்?

‘பிராமணர்’ குலத் தொழிலை செய்ய இயலாதபோது, அவன் சத்திரியருக்கான தொழிலை செய்ய மனுசாஸ்திரம் அனுமதிக்கிறது. சத்திரியர்கள் மனு சாஸ்திரப்படி நாட்டை ஆட்சி செய்யும் மன்னர்கள் மட்டுமல்ல, நாட்டுக்காக போராட வேண்டிய போர் வீரர்கள். ஆனால், சத்திரியர் தொழிலை ‘பிராமணர்கள்’ மேற்கொள்ள வரும்போது, அவர்கள் உயிருக்கு ஆபத்தான வாளை சுழற்றும் படையாளிகளாக முன்வருவதில்லை. மாறாக, அதிகாரத்தைக் கைப்பற்றும் ஆலோசகர்களாக, அதிகாரம் செலுத்தக்கூடியவர்களாக உயர்ந்த பதவிகளுக்கு மட்டும் வந்தார்கள்.

‘மனு சாஸ்திரம்’ பார்ப்பனர்களின் மரணதண்டனைக்கு தடை விதிக்கிறது. கொலை செய்த பார்ப்பானின் தலையை வெட்டக் கூடாது. தலைமுடியை வெட்டினாலே போதும் என்கிறது. அதனால்தான் கொலை செய்த காஞ்சி ஜெயேந்திரன், இப்போது பிணையில் வெளி வந்துள்ள குற்றவாளியாக இருந்தாலும், ‘ஆன்மிகத் தலைவராக’ வலம் வந்து கொண்டிருக்கிறார். மொட்டை போட்ட பார்ப்பனர்கள், கொலைக்குற்றத்துக்காக தண்டனை பெற்றவர்கள் என்றால், மொட்டைத் தலையுடன் நிரந்தரமாக காட்சி அளிக்கும் ‘துக்ளக்’ சோ எத்தனை கொலை செய்தவரோ தெரியவில்லை என்று கவித்துவமாக குறிப்பிட்டபோது கூட்டத்தினரிடையே பலத்த சிரிப்பொலி எழுந்தது. ‘பிராமணன்’ பால் விற்கத் தடை போடுகிறது மனு சாஸ்திரம். அத்தியாயம் 10, “பிராமணன்” செய்யக்கூடாத தொழிலை பட்டியலிடுகிறது. பால் விற்கும் “பிராமணன்” மூன்றே நாட்களில் ‘சூத்திரனாகி’ விடுகிறான் என்கிறது மனு சாஸ்திரம். ஆனால், மனு சாஸ்திரத்தை புறந்தள்ளிவிட்டு பார்ப்பான் ஓட்டல் தொழிலை நடத்திக் கொண்டிருக்கிறான். ஓட்டல் நடத்தினாலும் “பிராமணனாகவே” நீடிக்கிறான்.

மனு தர்ம நச்சு சிந்தனைகள், பார்ப்பனர்களிடம் மட்டுமல்ல, பார்ப்பனரல்லாத மக்களின் மூளையிலும் ஏற்றப்பட்டிருக்கிறது. அதனால்தான் திராவிடர் விடுதலைக் கழகம் நடத்தும் ஜாதி-தீண்டாமை பரப்புரை இயக்கங்கள், பிற்படுத்தப்பட்டோர் வாழும் பகுதியை நோக்கியே முன்னெடுக்கப்படுகிறது. நாம் நடத்தும் மனுதர்மத்தை எரிக்கும் போராட்டம் ஏதோ காகித எரிப்பு; நூல் எரிப்பு போராட்டமல்ல. மாறாக மக்களின் மனுதர்ம சிந்தனையை எரிப்பதாகும் என்றார் அ.ப.சிவா.

‘மாணவராக மனு சாஸ்திரத்தை எரிப்பேன்’ என்ற தலைப்பில் பேசிய ர.சிலம்பரசன், ‘மனு சாஸ்திரம்’ வகுத்த நான்கு வர்ண பிறவி இழிவுகளை ஒழிக்க வந்ததுதான் இடஒதுக்கீடு. இடஒதுக்கீட்டு உரிமைகளை நாம் படிக்கட்டுகளாக மாற்றிக் கொண்டு முன்னேறுவதற்கும் ஜாதி மறுப்புத் திருமணங்களை செய்வதோடு பார்ப்பனிய சடங்கு கலாச்சாரங்களைப் புறக்கணிப்பது வழியாகவும், மனு விரோதிகளாய் மாணவர் சமுதாயம் வாழ்ந்து காட்ட வேண்டும் என்று வலியுறுத்தினார். கருத்தரங்கத் தலைவர் மடத்துக்குளம் மோகன், இடையிடையே உரையில் விடுபட்ட மனுசாஸ்திரம் தொடர்பான கருத்துகளை எடுத்துக்காட்டி சிறப்பாக உரையாற்றினார்.

தொடர்ந்து ‘காதல் துளிர்க்கட்டும்; சாதியம் கருகட்டும்’ என்ற தலைப்பில் பாவலர் கொழுமம் ஆதி தலைமையில் சிறப்பான பாவரங்கம் நடந்தது. பெரியார் பற்றி பாவலரேறு பெருஞ்சித்திரனார் வடித்த மிகச் சிறப்பான கவிதையோடு பாவரங்கத்தைத் தொடங்கினார். தோழர்கள் அனுப்பட்டி பிரகாசு, மா. நேருதாசு, பாரதிவாசன், விக்னேஷ், பிரசாந்த், அகிலா ஆகியோர் உணாச்சியான கவிதைகளை வழங்கினர்.

பிற்பகல் 2 மணியளவில், “மனு சாஸ்திரத்தை அதிகம் பின்பற்றுவது அரசுகளே” என்ற தலைப்பில் ஒரு அணியும்; “மக்களே” எனும் தலைப்பில் ஒரு அணியும் வாதிட்ட பட்டிமன்றம் தொடங்கியது. கழகப் பரப்புரைச் செயலாளர் பால். பிரபாகரன் நடுவராக இருந்தார். “அரசுகளே” என்ற அணியில் மலரினியன், ஜெய் சாந்தி, நீதிராசன் ஆகியோரும், “மக்களே” எனும் அணியில் நிர்மல் குமார், பெரியார் செல்வி, ர.சிலம்பரசன் ஆகியோரும் வாதிட்டனர். இரு

4 ஆம் பக்கம்

# கோவையில் ஜாதிக்கு எதிராய் போர் முழக்கம்































படம்: கோகுலகண்ணன்

DATE OF PUBLICATION 21.03.2013
PURATCHI PERIYAR MUZHAKKAM

TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/12-14
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/7776

# சிந்தனைக்கு விருந்தான பட்டிமன்றம்!

*2 ஆம் பக்கத் தொடர்ச்சி*

அணியினரும் சிறப்பான வாதங்களை முன் வைத்தனர்.

"மனுதர்மத்தை அரசுகளே அதிகம் பின்பற்றுகிறது" என்ற அணி தரப்பில் வாதிட்ட தோழர்கள், கலைஞர் கருணாநிதியை நள்ளிரவில் கைது செய்த காவல்துறை அவரை மிக மோசமாக நடத்தியதையும், அதே நேரத்தில் கொலைக் குற்றத்தில் காஞ்சி சங்கராச்சாரியைக் கைது செய்த காவல்துறை, அவர் மீது கைகூட பட்டுவிடாமல் மலம் கழிக்க வாழை இலை தந்து, பூஜை நடத்த அனுமதித்து, "மகானை"ப் போல நடத்தியதையும், தங்கள் ஜாதிப் பெண்ணைத் திருமணம் செய்யும் தலித்தின் கையை வெட்டுவேன் என்று பேசிய காடுவெட்டி குரு மீது வன்கொடுமை தடுப்புச் சட்டத்தைப் பயன்படுத்தாமல், அரசு அமைதி காத்ததையும் சுட்டிக்காட்டினர். தீண்டாமை குற்றங்களுக்கு காவல்துறையே துணை போவதும், கட்டை விரலைக் கேட்ட 'துரோணாச்சாரி'களை அங்கீகரித்து, அரசு விருதுகளுக்கு துரோணாச்சாரி பெயர் சூட்டியதையும் பெண்களுக்கு 33 சதவீத இடஒதுக்கீடு உரிமை வழங்க அரசு தொடர்ந்து மறுப்பதையும், மனுசாஸ்திரத்துக்கு எதிரான சட்டங்கள் இருந்தும் அந்தச் சட்டத்தை அமுல்படுத்தாமல் இருப் பதையும் சட்டத்திலேயே மதப் பிரச்சினைகள் தொடர்பான பழக்க வழக்கங் களில் தலையிடக் கூடாது என்று கூறப்பட்டிருப்பதையும் சுட்டிக்காட்டினர்.

அரசு, அரசு அதிகாரிகள் சட்டத்தை மதிக்காது துணிவாக மீறுவதற்குக் காரணமே, மக்களிடம் ஆழமாகப் பதிந்துள்ள மனுசாஸ்திர சிந்தனைகள்தான் என்று மக்கள் தரப்பு அணியினர் வாதிட்டனர். மனு சாஸ்திர எரிப்புப் போராட்டத்தை திராவிடர் விடுதலைக் கழகம் அறிவித்து, அடுத்த நாளே அரசுக்கு எதிராக அந்த போராட்டத்தை நடத்தாமல் மக்களிடம் சென்று விளக்க வேண்டும் என்று முடிவெடுத்தது ஏன்? மக்களிடம் தான் மனுசாஸ்திர சிந்தனை அதிகம் ஊறிப் போயிருக்கிறது என்பதால்தானே! ஆணும் பெண்ணும் சமம் என்று சட்டம் இருந்தாலும் சட்டத்தை மதிக்காமல், பெண்ணின்மீது 'மனு' கூறிய அடிமைப் பண்புகளை திணித்து, அவள்தான் நல்ல ஒழுக்கமான பெண் என்று சமூகத்தில் நிலைநாட்டியிருப்பது மக்கள் தானே! அரசின் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தை தீவிரமாக செயல்படவிடாமல் அதை மருத்துவர் ராமதாசு ஜாதியை திரட்டி எதிர்ப்பதே, மனுதர்மம் மக்களிடம்தான் அதிகமாக மண்டிக்கிடக்கிறது என்பதற்கு சான்று அல்லவா?

பார்ப்பனர்களைக் கொண்டுதான் வீட்டில் திருமணம், சடங்குகளை செய்ய வேண்டும் என்று சட்டம் ஏதும் இல்லாமலே, மக்கள் அதை விடாப்பிடியாக பின்பற்றுவது ஏன்? மக்களிடம் ஊறிப் போன மனு சிந்தனை தானே! என்ற அடுக்கடுக்கான கேள்விகளை எழுப்பினர். இரு தரப்பு வாதங்களையும் கேட்ட நடுவர் பால்.பிரபாகரன், மனுசாஸ்திரத்தை அதிகம் பின்பற்றுவது அரசுகளே என்று தீர்ப்பளித்தார். மாநகர செயலாளர் து.ஜெயந்த் நன்றி கூற, காலை நிகழ்வுகள் பிற்பகல் 3 மணிக்கு முடிவுற்றன. தோழர்களுக்கு சுவையான மாட்டிறைச்சி உணவு குறைந்த விலையில் வழங்கப்பட்டது.

**எழுச்சிப் பேரணி :** மாலை 4.00 மணியளவில் ஜாதி-தீண்டாமை ஒழிப்புப் பேரணி, திருப்பூர் மாவட்ட கழகத் தலைவர் சு.துரைசாமி தலைமையில் கழகப் பொருளாளர் ப.இரத்தினசாமி கொடியசைத்து வைக்க, சிவானந்தா காலனியிலிருந்து தொடங்கியது. பறை இசை முழக்கத்தோடு குழந்தைகள், பெண்கள், தோழர்கள், நீல நிற ஜீன்ஸ் பேண்ட், கறுப்புச் சட்டை சீருடையோடு மனுசாஸ்திர எதிர்ப்பு முழக்கங்கள் எழுப்பி அணி வகுத்து வந்தனர்.

பொது மக்கள் - வணிக நிறுவனங்கள் திரளாக உள்ள சாலைகளின் வழியே வந்த பேரணியை ஏராளமான பொது மக்கள் பார்த்தனர். பேரணி வழி நெடுகிலும் கழகக் கொடிகள் கட்டப்பட்டிருந்தன. இரண்டு மணி நேரம் பேரணி நடந்தது. 6 மணியளவில் பொது மாநாடு நடக்கும் சித்தாபுதூர் வி.கே.கே.மேனன் சாலையில் அமைக்கப்பட்டிருந்த மாநாட்டு மேடையை வந்தடைந்தது.

**பொது மாநாடு :** சட்ட எரிப்புப் போராளி ஆனை மலை திருமூர்த்தி அரங்கில் மேட்டூர் டி.கே.ஆர். குழுவின் இசை நிகழ்ச்சி சிறப்பாக நடந்தது. தொடர்ந்து கடத்தூர் பகத்சிங் வீர விளையாட்டுக் குழுவினர், மேடையில் வீர விளையாட்டு நிகழ்ச்சிகளை நடத்தினர்.

மேட்டூர் கருப்பரசன் கலைக் குழுவினர் வீதி நாடகங்களை சிறப்பாக நடத்தினர். இந்து மதப் பண்டிகைகளின் ஆபாசம்-மூடநம்பிக்கைகளையும், 'மனுசாஸ்திரம்' திணித்த ஜாதி-தீண்டாமை அடிமைத்தனத்தையும் நாடகமாக நடித்துக் காட்டினர்.

கோவை மண்டல கழக அமைப்புச் செயலாளர் பல்லடம் விஜயன் தலைமையில் மாவட்ட தலைவர் வெள்ளமடை நாகராசன் வரவேற்புரையாற்றினார். தமிழர் விடுதலை இயக்கத்தைச் சார்ந்த வழக்குரைஞர் வெண்மணி, எழுத்தாளர் பாமரன், எஸ்.டி.பி.அய். மாவட்ட பொதுச் செயலாளர் அப்துல்காதர், பி.யு.சி.எல். பொறுப்பாளர் பொன்.சந்திரன், எழுத்தாளர் மனுஷ்யபுத்திரன், திண்டுக்கல் சட்டமன்ற சி.பி.அய்.எம். உறுப்பினர் க. பாலபாரதி, பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஆகியோர் உரையாற்றினர்.

1957 ஆம் ஆண்டு பெரியார் நடத்திய சட்ட எரிப்புப் போராட்டத்தில் பங்கேற்று, 6 மாதம் சிறை சென்ற சட்ட எரிப்புப் போராளிகள் பெரியார் பெருந் தொண்டர்கள் கு.ஆறுமுகம் அவர்களுக்கு, கழகத் தலைவர் கொளத்தூர் மணியும், ச. காளிமுத்து அவர்களுக்கு, பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரனும் ஆடை போர்த்தி சிறப்பு செய்தனர். மூத்த கழகத் தோழர் பொள்ளாச்சி விஜயராகவன், சட்ட எரிப்புப் பேராளிகளை அறிமுகப்படுத்தி உரையாற்றினார். மாவட்டத் தலைவர் வெள்ளமடை நாகராசன் இயக்கிய 'ஜாதி-இது மனுதர்ம தீர்ப்பு' என்ற குறும்பட ஒளி நாடாவை கழகத் தலைவர் கொளத்தூர் மணி வெளியிட, எழுத்தாளர் மனுஷ்யபுத்திரன் சட்டமன்ற உறுப்பினர் பாலபாரதி ஆகியோர் பெற்றுக் கொண்டனர். செகுடந்தாளி முருகேசன் படுகொலையை சித்தரிக்கும் இந்த 11 நிமிட குறும்படம் திரையிடப் பட்டது. மாநகர துணைச் செயலாளர் ப. கிருட்டிணன் நன்றி கூற, 10.45 மணியளவில் மாநாட்டு நிகழ்ச்சிகள் நிறைவடைந்தன. மண்டல மாநாடு என்றா லும், மாநில மாநாடு என்று வியக்கும் வகையில் மிகச் சிறப்பாக மாநாடு அமைந்திருந்ததை பலரும் பாராட்டினர்.

**– நமது செய்தியாளர்**

# 'இந்து' ஏட்டின் மனுதர்ம புத்தி

தமிழ்நாட்டில் ஈழ விடுதலைக்கு எதிராக மாணவர்கள் களத்தில் இறங்கியுள்ளனர். அவர்களுடன் பொது மக்களும் கைகோர்த்து நிற்கும் சூழல் உருவாகியுள்ளது. நீண்டகாலத்துக்குப் பிறகு தமிழகத்தில் ஒரு அமைதிப் புரட்சி உருவாகியிருக்கிறது. ஆனால், பார்ப்பன 'இந்து' நாளேடு, இந்த உணர்வுகளை அவமதித்து தலையங்கம் தீட்டுகிறது. தமிழகத்தின் உணர்வுகளை ஒதுக்கிவிட்டு, இது பற்றி கவலைப்படாமல் இந்தியா-இலங்கை தொடர்பான கொள்கை முடிவுகளை எடுக்க வேண்டும் என்ற கருத்தோடு, (மார்ச் 19) தலையங்கம் தீட்டியுள்ளது. தமிழ்நாட்டில் 'தமிழ் ஈழம்' வேண்டும் என்று பேசுவோர் ஒரு நாட்டைத் துண்டாடுவதால் மக்கள் சந்திக்க வேண்டிய அவலங்கள் பற்றி சிந்திக்காதவர்கள் என்றும், இவர்களை ஒதுக்கித் தள்ளிவிட்டு ஒன்றுபட்ட இலங்கைக்குள் அரசியல் தீர்வு காண இந்தியா முயற்சிக்க வேண்டும் என்றும் அந்த தலையங்கம் 'உபதேசம்' செய்கிறது.

ஈழத் தமிழர்கள் தங்களுக்கான ஒரே அரசியல் தீர்வு தமிழ் ஈழ விடுதலை தான் என்று 1976 ஆம் ஆண்டிலேயே வட்டுக்கோட்டை தீர்மானம் வழியாக அறிவித்து விட்டார்கள். அதே கோரிக்கையை முன் வைத்து, தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழர்களிடம் வாக்குகளையும் பெற்று உலகுக்கு உணர்த்தியது.

அதைத் தொடர்ந்து நடந்த உள்ளாட்சித் தேர்தல்களிலும் தமிழ் ஈழமே தங்களுக்கான ஒரே தீர்வு என்பதை ஈழத் தமிழர்கள் வாக்களிப்பு வழியாக உணர்த்தியிருக்கிறார்கள்.

விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையே நார்வே முன் முயற்சியால் உருவான போர் நிறுத்த ஒப்பந்தம் தமிழர்களுக்கான தனி தாயகப் பகுதியை எழுத்துப்பூர்வமாக உறுதி செய்து இலங்கை ராணுவம் தமிழர் பகுதிக்குள் நுழைவதற்கு தடை விதித்தது. இதை இலங்கை அரசும் ஏற்றுக் கொண்டு கையெழுத்திட்டது.

இந்திய அரசு ஏற்பாட்டில், திம்புவில் போராளிக் குழுக்களுக்கும் இலங்கை அரசுக்குமிடையே நடந்த பேச்சு வார்த்தையில் தமிழர்களுக்கென்று பாரம்பர்ய பிரதேசம் உண்டு என்பதையும், அவர்கள் பிரிந்து செல்லும் உரிமைக் குரியவர்கள் என்பதையும் முன் நிபந்தனையாக ஏற்றுக் கொண்டே பேச்சுவார்த்தை முயற்சியில் மேற்கொள்ளப்பட்டன.

ராஜீவ்-ஜெயவர்த்தனே ஒப்பந்தத்தை நிறைவேற்ற அனுப்பி வைக்கப்பட்ட "இந்திய அமைதிப் படை", வடக்கு-கிழக்கு மாகாண கவுன்சில் ஒன்றை உருவாக்கி, இடைக்கால அரசை அறிவித்து, வரதராஜப் பெருமாள் என்பவரை முதல்வராக்கியது. அப்போது வரதராஜப்பெருமாள் கட்சியின் (ஈபி.ஆர்.எல்.எப்.) செயலாளரான பத்மநாபா, 1990 ஆம் ஆண்டு மார்ச் 1 ஆம் தேதி ஒரு முக்கிய அறிவிப்பை வெளியிட்டார். அதன்படி, மாகாண கவுன்சிலில் இடம் பெற்றிருந்த உறுப்பினர்களைக் கொண்ட குழு, 'அரசியல் நிர்ணய சபையாக' மாறுகிறது என்றும், 'சுதந்திர தமிழ் அரசுக்கான' அரசியல் சட்டத்தை உருவாக்கும் பொறுப்பை மாகாண கவுன்சிலில் இடம் பெற்றவர்கள் உருவாக்குவார்கள் என்றும் அறிவித்தார். இது தமிழ் ஈழத்துக்கான பிரகடனமே ஆகும்.

இப்போது புலம் பெயர்ந்து வாழும் ஈழத் தமிழர்களின் ஒருமித்த குரல், 'சுதந்திரத் தமிழ் ஈழம்' என்பதாகவே ஒலித்து வருகிறது. 'நாடு கடந்த தமிழீழ அரசு' என்ற தமிழர்களுக்கான நாடாளுமன்றமும், மக்கள் வாக்கெடுப்பு வழியாக உருவாகியுள்ளது.

இந்த வரலாற்று நிகழ்வுகளை புறந்தள்ளிவிட்டு, 'இனப்படுகொலை' நடத்தும் நாட்டுடன் இணைந்து வாழ இந்திய அரசு முயற்சிக்க வேண்டும் என்று அண்ணாசாலையில் தங்கள் அலுவலக அறையில் உட்கார்ந்து கொண்டு சில "அம்பி"கள் எழுதி, தங்களின் விருப்பத்தை மக்களின் விருப்பமாக திணிக்க முயற்சிக்கிறார்கள்.

ஈழத் தமிழர்களின் அரசியல் தீர்வுகளை அவர்கள்தான் முடிவெடுக்க வேண் டுமே தவிர, பத்திரிகை அலுவலகத்தில் வேலை செய்யும் பார்ப்பனர்கள் அல்ல.

'மனு சாஸ்திரத்தை' தாங்களே எழுதிக் கொண்டு, அதை மக்கள் மீது திணித்த அதே கூட்டம், இப்போது ஈழத் தமிழர்களுக்கு எதிரான சதித் திட்டங்களை உருவாக்கி, அதை அந்த மக்கள் மீது திணிக்கிறது.

இவர்களின் 'மனுதர்ம' புத்தி மாறவே இல்லை. **(இரா)**


## 'தலித் முரசுக்கு' நன்கொடை

'தலித் முரசு' இதழ் வளர்ச்சிக்கு மாநாட்டுக் குழு சார்பில் கோவை மாநகர தலைவர் ந.பன்னீர்செல்வம், 'தலித் முரசு' ஆசிரியர் புனித பாண்டியனிடம் ரூ.5000/- ஈரோட்டு மாநாட்டில் காலை நிகழ்வில் நன்கொடையாக பலத்த கரவொலிக்கிடையே வழங்கினார்.

"புரட்சிப் பெரியார் முழக்கம்"
**ஆண்டுக்கட்டணம் ரூ.200/-**
தொடர்புக்கு:
ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர்,
திருவான்மியூர், சென்னை-41.
✆ 99416 13535

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 22nd March 2013

OWNER & PUBLISHER & EDITOR : K. RAJENDRAN, PUBLISHED AT 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.



புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2044 | மார்ச் 28, 2013 | புரட்சி 12 | முழக்கம் 11 | விலை: ரூ.3.00

## ஜாதிப் பெயரை நீக்கக் கோரி வணிக நிறுவனங்களிடம் நேரில் வேண்டுகோள்

**கழக மாநிலப் பொறுப்பாளர்கள் கூட்டத்தின் முடிவுகள்**

*திராவிடர் விடுதலைக் கழக மாநில மண்டல பொறுப்பாளர்கள் கூட்டம் 23.3.2013 அன்று திருச்சியில் 'தமிழ்நாடு சோசியல் சர்வீஸ் சொசைட்டி'யில் காலை 11 மணியளவில் தொடங்கியது.*

*கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், பொருளாளர் இரத்தினசாமி உள்ளிட்ட மாநில பொறுப்பாளர்கள், மண்டல அமைப்புச் செயலாளர்கள், கழக முன்னணி அமைப்புகளான அறிவியல் மன்றம், சுயமரியாதை கலை பண்பாட்டுக் கழகம் மற்றும் தமிழ்நாடு மாணவர் கழக அமைப்புகளின் பொறுப்பாளர்கள் பங்கேற்றனர்.*

*அம்பேத்கர் பிறந்த நாளான ஏப்.14 அன்று திராவிடர் விடுதலைக் கழகம் நடத்தவிருக்கும் மனு சாஸ்திர எரிப்புப் போராட்டத்தை ஒரே இடத்தில் நடத்தாமல் பல்வேறு பகுதிகளில் நடத்துவது என்று முடிவு எடுக்கப்பட்டது. அதன்படி, சென்னை, சேலம், மேட்டூர், ஈரோடு, கோபி, திருப்பூர், பொள்ளாச்சி, கோவை, விழுப்புரம், புதுவை, சிதம்பரம், நாமக்கல், கரூர் ஆகிய பகுதிகளில் தனித்தனியாகவும், காஞ்சி மற்றும் வேலூர், கிருஷ்ணகிரி மற்றும் தர்மபுரி, திண்டுக்கல், தேனி, மதுரை மற்றும் சிவகங்கை, தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி, திருவாரூர் மற்றும் தஞ்சை, திருச்சி, புதுக்கோட்டை மற்றும் பெரம்பலூர் ஆகிய மாவட்டங்கள் இணைந்தும் போராட்டத்தை நடத்தலாம் என்று முடிவு செய்யப்பட்டது.*

*மனு சாஸ்திர எரிப்புக் கொள்கையில் உடன்பாடுடைய அமைப்புகள் இயக்கங்களின் ஆதரவைப் பெற்று, அவர்களையும் போராட்டத்தில் பங்கேற்க அழைப்பது என்றும், அதற்கான ஆதரவு கோரும் கடிதங்களை எழுதவும் முடிவு செய்யப்பட்டது.*

*ஜாதி–தீண்டாமை ஒழிப்பு மாநாடுகளில் கழக சார்பில் வலியுறுத்தப்பட்ட கோரிக்கைகளில் ஒன்று ஜாதி பெயரில் உள்ள வணிக நிறுவனங்களின் ஜாதிப் பெயரை நீக்க வேண்டும் என்பதாகும். இந்தக் கோரிக்கையை வலியுறுத்தி கழக சார்பில் அத்தகைய நிறுவனங்களுக்கு ஜாதிப் பெயரை நீக்கக் கோரி வேண்டுகோள் கடிதங்களை முதலில் அனுப்பி, பிறகு நேரிலும் வலியுறுத்துவது என்று முடிவெடுக்கப்பட்டது. நடந்து முடிந்த மண்டல மாநாடுகள் குறித்து அதன் நிறை குறைகள் விரிவாக ஆய்வு செய்யப்பட்டன.*

## ஜாதி எதிர்ப்புப் பயணக் குழுவுக்கு காஞ்சியில் எழுச்சி வரவேற்பு




பரப்புரைப் பயணக் குழுவினர்

*'எங்கள் தலைமுறைக்கு ஜாதி வேண்டாம்' என்ற முழக்கத்தை முன் வைத்து திராவிடர் விடுதலைக் கழக சென்னை மண்டல கழகத் தோழர்கள் நடத்திய 10 நாள் பரப்புரைப் பயணத்தின் நிறைவு விழா மார்ச் 24 மாலை காஞ்சிபுரத்தில் எழுச்சியுடன் நடைபெற்றது. காஞ்சிபுரம் பெரியார் சிலை அருகே, சனாதன சங்கர மடத்தின் எதிரே மக்களை அடிமைப்படுத்தும் பார்ப்பன மனுவின் சாஸ்திரங்களை நிகழ்வில் பேசியவர்கள் விரிவாக தோலுரித்தனர்.*

காஞ்சி மக்கள் மன்றத்தின் தோழர்கள் ஜாதி-தீண்டாமை எதிர்ப்புப் பாடல்கள் நடனங்களுடன் கலை நிகழ்ச்சிகளை நடத்தினர். தோழர் க. இரவி பாரதி தலைமையேற்றார். தோழர்களின் உரை, கலை நிகழ்ச்சி என்று மாறி மாறி மேடையில் நிகழ்ச்சிகள் நடந்தன. பயணத்தில் பெற்ற அனுபவங்களை விளக்கி, அதில் பங்கேற்ற தோழர் அய்யனார் உரையாற்றினார். வழக்கறிஞர்கள் துரை அருண், திருமூர்த்தி, காஞ்சி மக்கள் மன்றத் தோழர் மேகலா, விடுதலை சிறுத்தைகள் கட்சியின் பொறுப்பாளர்கள் பாசறை செல்வராசு, பார் வேந்தன், கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன், தலைவர் கொளத்தூர் மணி உரையாற்றினர்.

பார்வேந்தன் தனது உரையில், "பா.ம.க. நிறுவனர் மருத்துவர் ராமதாசின் வன்னிய சமூக மக்கள் வாழ்க்கையில் இப்போதும்கூட தலித் மக்களுக்கும், அவர்களுக்கும் வேறுபாடு தெரியாத நிலையில்தான் வாழ்கிறார்கள். இந்த ஒடுக்கப்பட்ட சமூகங்கள் இணைந்து தங்களின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்துக்கும் உரிமைக்கும் போராட வேண்டிய நிலையில் தலித் மக்களுக்கு எதிராக வன்னியர்களை தூண்டிவிடுவது நியாயம் தானா?" என்று கேட்டார்.

"இதே காஞ்சிபுரத்தில் 'சாமி' ஊர்வலங்கள் வருகின்றன. அதில் 'சாமி' ரதத்தில் பார்ப்பான் உட்கார்ந்திருக்கிறான். இரண்டையும் தோளில் தூக்கிக் கொண்டு சாலைகளில் ஓடுகிறவர்கள் வன்னியர் சமுதாயத்தைச் சார்ந்தவர்கள்தான். தலித் சமூகத்தினர்கூட சாலையின் ஓரத்தில் ஒதுங்கி நின்று வேடிக்கை பார்ப்பதோடு சரி; இப்படி பார்ப்பனியம் சுமத்தும் இழிவை தூக்கிச் சுமக்கும் சொந்த ஜாதியினரின் இழிவை தட்டிக் கேட்க வேண்டிய மருத்துவர் ராமதாசு, தலித் மக்களுக்கு எதிராக கொடி தூக்குவது ஏன்?" என்ற கேள்வியை எழுப்பினார்.

### சங்கரமடத்துக்கு எதிரே நடந்த மாட்டுக் கறி விருந்து

**காஞ்சிபுரத்தில் சங்கரமடம் இருப்பதால் நகரத்துக்குள் நீண்டகாலமாகவே மாட்டுக்கறி விற்பனை தடைசெய்யப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். இது எழுதப்படாத சட்டமாக இங்கே அமுலில் உள்ளது. காஞ்சி சங்கரமடம் எதிரே நடந்த கழகக் கூட்ட மேடை அருகில் பயணத்தில் பங்கேற்ற தோழர்களுக்கும் கழகத்தினருக்கும் மாட்டுக்கறி உணவு வழங்கி, சங்கரமட மனு சாஸ்திரத் தடையை கழகம் அடித்து நொறுக்கியது.**

பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

"பரப்புரை இயக்கத்தில் பல இடங்களில் ஜாதி உணர்வாளர்கள், ஜாதியை உங்களால் ஒழித்துவிட முடியுமா என்று கழகத் தோழர்களைப் பார்த்து கேள்வி கேட்டுள்ளார்கள். அவர்களுக்கு நாங்கள் கூறிக் கொள்கிறாம் - தமிழ்நாட்டில், 100 ஆண்டுகளுக்கு முன்பு, 50 ஆண்டுகளுக்கு முன்பு, இருந்த ஜாதி வெறி இப்போது தளர்ந்திருக்கிறதா, இல்லையா? என்று கேட்கிறோம். நாடகக் கொட்டகையில் பஞ்சமர்களுக்கும், பெரும் வியாதி கொண்டவர்களுக்கும் இடமில்லை என்று துண்டறிக்கையில் போட்டார்கள். தாழ்த்தப்பட்டவர்கள் பேருந்தில் பயணம் செய்யக் கூடாது என்று பேருந்து டிக்கட்டிலேயே அச்சடித்தார்கள். மனநோய் மருத்துவமனையிலேயேகூட பைத்தியம் பிடித்த பார்ப்பனர்களுக்கு தனிப் பிரிவை கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரியில் வைத்திருந்தார்கள். தேசத் தந்தையாக இருந்தாலும் காந்தி, மயிலாப்பூரில் சீனிவாச அய்யங்கார் வீட்டில் தங்கியபோது, அவரது வீட்டுத் திண்ணை வரை தான் அனுமதிக்கப்பட்டார். இன்று அத்தகைய கடும் ஜாதி வெறி மாறியிருக்கிறதா? இல்லையா? சூத்திரர் பஞ்சமர் கல்விக்கு முழுமையாக தடை

4 ஆம் பக்கம்

# இந்து முன்னணி கோட்டையை தகர்த்தது கோபி கழகம்

ஏப்.14 நடைபெற இருக்கும் மனுசாஸ்திர எரிப்புப் போராட்டம் ஏன்? விளக்க தெருமுனை பரப்புரைப் பயணம், அனைத்து ஒன்றியப் பகுதிகளில் நடைபெற்று வருகிறது. அதன் ஒரு பகுதியாக கடந்த 3.3.2013 ஞாயிறன்று கோபி ஒன்றியத்திற்கு உட்பட்ட பாரியூர்-நஞ்சகவுண்டன் பாளையம், கணபதிபாளையம் ஆகிய பகுதிகளில் நடந்தது. பயணம் பாரியூர்-நஞ்சகவுண்டன்பாளை யத்தில் துவங்கியது. அப்பகுதி கோபி ஒன்றிய பகுதிகளில் இந்து முன்னணி ஆதிக்கம் அதிகம் உள்ள பகுதியாக கருதப்பட்டு வருகிறது. இதுவரை பெரியாரியல் உள்ளிட்ட முற்போக்கு அமைப்புகள் அங்கு பரப்புரைக்குச் சென்றது இல்லை. முதலாவதாக திராவிடர் விடுதலைக் கழகம் உள்ளே நுழைந்தது.

வாகனம் உள்ளே நுழைந்தவுடன், ‘இது எங்கள் பகுதி, நீங்கள் இங்கே பேசக் கூடாது’ என்றும், ‘எங்கள் வீட்டின் முன் வாகனத்தை நிறுத்தக் கூடாது’ என்றும், தோழர்களை முற்றுகை யிட்டனர். தோழர்கள், ‘இது ஜனநாயக நாடு, யார் எங்கு வேண்டுமானாலும் பேசுவதற்கு உரிமை உண்டு’ என்று கூறியபடி பெரியார் பாடல்களை ஒலிக்க விட்டனர். உடனே இந்து முன்னணி அமைப்பினர், தோழர்களுக்கு எதிராக திரண்டனர்.

தோழர்களும் அவர்களுக்கு எதிராக திரண்டனர். அங்கு வந்த காவல்துறை ஆய்வாளர், இந்து முன்னணியிடம் “அவர்கள் முறையாக அனுமதிப் பெற்று வந்துள்ளனர். எனவே நீங்கள் விலகி சென்று விடுங்கள். இல்லையென்றால் உங்களை கைது செய்ய நேரிடும்” என்று அவர்களிடம் கூறினார். அதற்கு அவர்கள், “இது எங்கள் பகுதி. எங்களின் மனம் புண்படும்படி பேசு வார்கள். எனவே அவர்களை வெளியேற்றுங்கள்” என்று முறையிட்டனர். அதற்கு காவல்துறை இசையவில்லை.

தோழர் அர்ச்சுனன், வேணுகோபால் ஆகியோர் சாதி ஒழிப்புப் பாடல்களை பாட, பரப்புரை துவங்கியது. தோழர்கள் சிதம்பரம் மற்றும் மண்டல அமைப்புச் செயலாளர் இராம. இளங்கோவன் ஆகியோர் போராட்டம் ஏன்? என்பது பற்றியும், இந்து முன்னணி, ஆர்.எஸ்.எஸ். போன்ற அமைப்பு களால் நம்மிடையே ஏற்படுத்தப்பட்டுள்ள இடைவெளி, பார்ப்பனியத்தின் அடக்குமுறை போன்றவற்றை விளக்கிப் பேசினர். தோழர்கள் பேசும்போது, இந்து முன்னணியினர் ஓம் காளி, ஜெய் காளி, பாரத் மாதாக்கி ஜெ! என்று கத்திக் கொண்டே இருந்தனர். காவல்துறை அவர்களை எச்சரித்தது. ஆனால், இவ்வளவு நடந்தபோதும், அப்பகுதி பொது மக்கள், அவர்கள் (இந்து முன்னணியினர்) என்ன வேண்டுமானாலும் சொல்லட்டும், நீங்கள் பேசுங்கள் என்று ஆதரவளித்தனர். அங்கு பரப்புரைப் பயணத்தை நடத்தி முடித்துக் கொண்டு கணபதிபாளையம் சென்றனர். கழக ஆதரவாளர் பூங்கொடி, அவரது தங்கை மரகதவள்ளி, தங்கை கணவர் செந்தில் ஆகியோர் தோழர்களுக்கு இரவு உணவு ஏற்பாடு செய்திருந்தனர். அங்கு உணவை முடித்தப் பின் தோழர்கள் அனைவரும் இல்லம் திரும்பினர்.

ஆனால், அந்த இரவு முழுவதும் இந்து முன்னணியினர் பாரியூர் நஞ்சகவுண்டன்பாளை யத்தில் பெரியார் அமைப்பு நுழைந்துவிட்டதால் ஊர் தீட்டுப்பட்டுவிட்டது என்று கூறி, அடுத்த நாள் 4.3.2013 அன்று மாலை 6 மணிக்கு தீட்டு கழிக்கும் திருவிழா நடத்துவதாக, சுவரொட்டி ஒட்டியதுடன், நஞ்சகவுண்டம்பாளையம் பகுதியில் சுவரெழுத்தாகவும் நகரம் முழுவதும் தார் சாலைகளில் சுண்ணாம்பிலும் எழுதி வைத்தனர். அடுத்த நாள் காலை கழகத் தோழர்கள் கண்களில் இதுபடவே, உடனே தோழர்கள் அனைவரும் மண்டல செயலாளர் தலைமையில் காவல்துறை யிடம் இவ்விழாவை உடனே தடுக்க வேண்டும். இது மனித உரிமை மீறல் செயல் என்று புகார் கொடுத்தனர். ஊருக்குள் வராமல் தடுக்க முயன்ற இந்து முன்னணியினரை கைது செய்ய வேண்டும் என்று புகார் கொடுக்கப்பட்டது. காவல் துறை புகாரை பதிவு செய்து, இந்து முன்னணியை சேர்ந்த பொறுப் பாளர்களை கைது செய்ய தேடி வருகிறார்கள். இந்து முன்னணியைச் சேர்ந்தவர்கள் தமது ஊர் திருவிழாவைகூட கொண்டாட முடியாமல் தலைமறைவாக வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

பரப்புரைப் பயணத்தில் தோழர்கள் மண்டல செயலாளர் இராம. இளங்கோவன், மாவட்ட தலைவர் நாத்திகசோதி, மாவட்ட செயலாளர் நிவாசு, ஒன்றிய அமைப்பாளர் ஆனந்தராசு, அர்ச்சுணன், வேணுகோபால், சிதம்பரம், ரகு, ரவி, விசயசங்கர், ராசேந்திரன், கீழ்வாணி சுந்தரம், சுப்பிரமணியம் உள்ளிட்ட தோழர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி : நிவாசு**

# கோவை அன்னூரில் ஐந்து கிளைக் கழகங்கள் உதயம்





கோவை மாவட்டத்தில் அய்ந்து புதிய கிளைக் கழகங்களின் பெயர்ப் பலகை திறப்பு விழாவும், கொடி யேற்று விழாவும் நடை பெற்றது. 10-02-2013 ஞாயிற்றுக் கிழமை அன்று காலை 10-00 மணி முதல் மாலை 5-00 மணி வரை தோழர்களின் வாகனப் பேரணி யுடன் நடைபெற்ற இந்த நிகழ்ச்சி யில் அனைத்து இடங்களிலும் திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி கழகப் பெயர் பலகையினை திறந்து வைத்து உரையாற்றினார். கோவை மாநகர் மாவட்டத் தலைவர் வழக்குறைஞர் பன்னீர்செல்வம், மாவட்ட கழகக் காப்பாளர் மேட்டுப்பாளையம் இராமச்சந்திரன், தமிழ்நாடு அறிவியல் மன்ற மாநில அமைப் பாளர் திருப்பூர் ஆசிரியர் சிவகாமி, திருப்பூர் முகில்ராசு மற்றும் கழகத் தலைவர் ஆகியோர் ஆங்காங்கு கழகக் கொடியினை ஏற்றிவைத்து உரையாற்றினார்கள். முதலில் காலை 10-00 மணிக்கு அன்னூர் ஒன்றியம் திருவள்ளுவர் நகர் கிளைக் கழக விழாவிற்கு கிளைக் கழகத் தலைவர் மு.குருதாசலம் தலைமை ஏற்க, செயலாளர் வ.பெரு மாள், பொருளாளர் மு.மாணிக்கம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். அடுத்து அன்னூர் ஒன்றியம் பசூர் பகுதியில், பசூர் கிளைக் கழகத் தலைவர் அ.ரஞ்சித் தலைமையேற்க, செயலாளர் அ.பழனிச்சாமி மற்றும் பொருளாளர் சீ.சந்திரசேகரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். அன்னூர் ஒன்றியம் முடுக்கன்துறை பகுதியில், முடுக்கன்துறை கிளைக் கழகத் தலைவர் ப.பிரசாந்த் தலை மையேற்க, செயலாளர் ப.கணேசன் மற்றும் பொருளாளர் அ.கோவிந்த ராசு ஆகியோர் முன்னிலை வகித் தனர். அன்னூர் ஒன்றியம் நல்லி செட்டிப்பாளையம் பகுதியில், நல்லி செட்டிப்பாளையம் கிளைக் கழகத் தலைவர் ஆ.சரோஜா தலைமை யேற்க, செயலாளர் ப. சந்திரசேகர் மற்றும் பொருளாளர் அ.கணேசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். அனைத்து கிளைகளிலும் தேநீர் மற்றும் குளிர்பானங்கள் கொடுத்து வரவேற்றார்கள்; பிற்பகல் 2-00 மணிக்கு நல்லிசெட்டிப்பாளையம் குருதாசலம் அவர்கள் இல்லத்தில் அனைவருக்கும் அசைவ உணவு வழங்கப்பட்டது. மாலை 4 மணிக்கு கோவை மாநகர் ஆவாரம் பாளை யத்தில் பெரியார் தொழிலாளர் கழகத்தைச் சார்ந்த ந.விஜய குமார் தலைமையேற்றார். ஆவாரம் பாளை யம் கிளைக் கழக அமைப்பாளர் கி.சமரசம் வரவேற்று பேசினார். தமிழ்ச்செல்வன், கோபி, சுரேஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கிளைக் கழகக் கொடியேற்றம், பெயர்ப் பலகைத் திறப்புகள் 18-3-2012 கழக மண்டல மாநாடு முடிந்த பின்னர் நிகழும் என்று கோவை மாநகர் மாவட்டத் தலைவர் வழக்குரைஞர் ந.பன்னீர் செல்வம் அறிவித்துள்ளார்.





## சென்னை மண்டலத் தோழர்களின் 10 நாள் பரப்புரைப் பயணம்

# “எங்கள் தலைமுறைக்கு ஜாதி வேண்டாம்”

சென்னை மண்டல திராவிடர் விடுதலைக் கழக சார்பில் மனித நேயத்தை மறுக்கும் மனு சாஸ்திரத்தை எரிப்போம்; எங்கள் தலைமுறைக்கு ஜாதி வேண்டாம் என்று சமத்துவம் முழங்கும் இளைஞர்களின் பரப்புரைப் பயணம் மார்ச் 15, சென்னை அம்பத்தூரில் தொடங்கி மார்ச் 24 காஞ்சிபுரத்தில் நிறைவடைந்தது. இந்த பரப்புரைப் பயணம் திருவள்ளூர், வேலூர், திருவண்ணாமலை, விழுப்புரம், காஞ்சிபுரம் உள்ளிட்ட 5 மாவட்டங்களில் பத்து நாட்கள் நடந்தன. துவக்கப் பொதுக் கூட்டம் சென்னை சூளையில் 14.3.2013 அன்று நடைபெற்றது.

முதல் நாள் 15.3.2013 அன்று காலை 10 மணியளவில் அம்பத்தூர் எஸ்டேட்டில் பரப்புரைப் பயணம் தொடங்கியது. பயணக் குழுவிற்கு விடுதலை சிறுத்தைகள் புரட்சி பாரதம், பகுஜன் சமாஜ் கட்சி உள்ளிட்ட முப்பது தோழர்கள் வரவேற்பளித்தனர். இந்நிகழ்ச்சியில் கு.து. கதிர்நிலவன் (வி.சி.), திருவள்ளூர் மாவட்ட செயலாளர் விஸ்வநாதன் (வி.சி.), தே. குணபாரதி (வி.சி.), அ.ராசுமோகன் (பி.எஸ்.பி.) ஆகியோர் கருத்துரை வழங்கினர். ஏ.பி. இப்ராஹிம், பி.எஸ்.குமார், அம்பேத் வளவன், விடுதலை தமிழன், பாண்டியன் உள்ளிட்ட தோழர்கள் பங்கேற்றனர்.

பகல் 12 மணியளவில் பூந்தமல்லி நீதிமன்றம் எதிரில் பரப்புரை நடைபெற்றது. பூந்தமல்லியில் நிகழ்ந்த பயணச் செய்தியறிந்த தோழர் ஒருவர் (பெயர் சொல்ல விரும்பாதவர்), இனி இழிவான தொழிலை செய்ய மாட்டேன் என்று தோழர்களிடம் சொல்லிவிட்டு நன்கொடை ரூ.500 வழங்கினார். கழகத் தோழர்களுக்கு மதிய உணவை மாங்காடு சேகர் ஏற்பாடு செய்தார்.

மாலை மூன்று மணியளவில் ஸ்ரீபெரும்புதூர் பேருந்து நிலையம் அருகிலும், மாலை 5.30 மணியளவில் வாலாஜா பேட்டை பேருந்து நிலையம் அருகிலும் பரப்புரை நடைபெற்றது. தோழர்கள் இரவு வேலூரில் தங்குவதற்கு பாலா ஏற்பாடு செய்தார். முதல் நாள் நிகழ்வில் கடாபி பங்கேற்றார்.

16.3.2013 இரண்டாவது நாள் 9.30 மணியளவில் வேலூர் பழைய பேருந்து நிலையம் திருவள்ளூர் சிலை அருகிலிருந்து பரப்புரைப் பயணம் தொடங்கியது. வேலூர் சட்டக் கல்லூரி மாணவர்கள் ஈழத்தமிழர்களுக்காக உண்ணாவிரதம் இருந்ததை அறிந்து பயணக் குழுவினர் சட்டக் கல்லூரி மாணவர்களை நேரில் சந்தித்து வாழ்த்துக்களை தெரிவித்தனர்.

கழக ஆதரவாளர் சிங்கராயன், கழகத் தோழர்களுக்கு தேநீர் அளித்தார். பகல் 12 மணியளவில் செதுவாலையிலும், மாலை 3 மணியளவில் குடியாத்தம் பேருந்து நிலையம் அருகிலும், மாலை 5 மணியளவில் பேரணாம்பட்டு பேருந்து நிலையம் அம்பேத்கர் சிலை அருகிலும் பரப்புரை நடைபெற்றது. மாலை 6.30 மணியளவில் புரட்சியாளர் அம்பேத்கர் வாழ்க்கை வரலாறு குறுந்தகடு வெளியீட்டு விழாவுடன் பரப்புரைப் பயண விளக்கப் பொதுக் கூட்டம், விராமலையில் நடைபெற்றது. கூட்டத்திற்கு இரா.ப. சிவா வரவேற்புரையாற்றினார். நெமிலி திலீபன் தலைமை தாங்கினார். விடுதலை சிறுத்தைகள் கட்சியின் வேலூர் மாவட்ட செயலாளர் சிவ. செல்லபாண்டியன், வெங்கடேசன், மா.ஜெ.வாசுதேவன், எ.அருண் முனிசாமி, சி.கே.வி. ஜீவா, பயணத்தில் இடம் பெற்றிருந்த கழகத் தோழர்கள் இரா. உமாபதி, ந. அய்யனார் ஆகியோர் உரையாற்றினர். வினோத்குமார் நன்றி கூறினார். கழகத் தோழர்கள் இரவு தங்குவதற்கு வாணியம்பாடி தோழர்கள் தங்கம், ஜெயகாந்தன் ஏற்பாடு செய்தனர்.

17.3.2013 மூன்றாவது நாள் காலை 9.30 மணியளவில் வாணியம்பாடி பேருந்து நிலையம் அருகிலும், பகல் 12 மணியளவில் ஜோலார்பேட்டை பெரியார், அம்பேத்கர் சிலை அருகில் பரப்புரை நடைபெற்றது. கழகத் தோழர்களுக்கு பெரியாரின் பெரும் தொண்டர் கவிஞர் குயில்தாசன் மதிய உணவு ஏற்பாடு செய்தார். மாலை 3.30 மணியளவில் திருப்பத்தூரில் தந்தை பெரியார் பேருந்து நிலையம் அருகே பரப்புரை நடைபெற்றது. தோழர்கள் சிவலிங்கம், பகுத்தறிவாளன் உரையாற்றினர், இரவு 8 மணியளவில் செங்கம் பேருந்து நிலையம் அம்பேத்கர் சிலை அருகில் பரப்புரை நடந்தது. இரவு தங்குவதற்கு விடுதலை சிறுத்தைகள் கட்சியின் செங்கம் ஒன்றிய செயலாளர்கள் ஆனந்த், சம்பத் ஆகியோர் ஏற்பாடு செய்தனர்.

18.3.2013 நான்காவது நாளில் காலை 9.30 மணியளவில் பாச்சல் என்ற ஊரிலும், காலை 11 மணியளவில் திருவண்ணாமலை காமராசர் சிலை அருகிலும், பகல் 2 மணியளவில் பெரியார் சிலை அருகிலும் மாலை 4.30 மணியளவில் மங்களத்திலும், 6.30 மணியளவில் கீழ்பெண்ணாத்தூர் பேருந்து நிலையம் அருகிலும் பரப்புரை நடைபெற்றது. பொன். சுப்பிரமணி, தோழர்களுக்கு இரவு உணவு ஏற்பாடு செய்தார். இரவு தோழர்கள் தங்குவதற்கு வழக்கறிஞர் சதீஷ்குமார் ஏற்பாடு செய்தார்.

19.3.2013 காலை 9.30 மணியளவில் வானாபுரம் பேருந்து நிறுத்தம் அருகிலும், காலை 11 மணி மூங்கில் துறைப்பட்டு பேருந்து நிறுத்தம் அருகிலும், பிற்பகல் 1 மணிக்கு வடசிறுவள்ளூர் பேருந்து நிறுத்தம் அருகிலும் பரப்புரை நடைபெற்றது. குழுவினருக்கு கழகத் தோழர் மு. நாகராஜ் மதிய உணவு ஏற்பாடு செய்தார். மாலை 5 மணிக்கு கடுவனூர் பேருந்து நிறுத்தம் அருகிலும், மாலை 6.30 மணியளவில் சங்கராபுரம் பேருந்து நிலையம் அருகிலும் பரப்புரை நிகழ்ந்தது. சங்கரா புரத்தில் ஆ.அம்பேத்கர், கி.அருண் ஆகியோர் கழகத்தில் இணைந்தனர். நிகழ்ச்சியில் மனித உரிமை அமைப்பைச் சார்ந்த இரவி. சௌகத் அலி, வி.வி.மு. இராமலிங்கம் ஆகியோர் பங்கேற்றனர்.

20.3.2012 அன்று வியாரிகள், இளைஞர்கள், கள்ளக்குறிச்சியில் நடத்திய ஈழ விடுதலை ஆதரவுப் போராட்டத்துக்கு பயணக் குழுவினர் நேரில் ஆதரவு தெரிவித்தனர். காலை 11.30 மணிக்கு கள்ளக்குறிச்சி கீதா திரையரங்கு அருகிலும், பிற்பகல் 1.30 மணியளவில் தியாகதுருகம் அம்பேத்கர் சிலை அருகிலும், மாலை 4.30 மணியளவில் எளவனஞ்சூர் கோட்டை பேருந்து நிறுத்தம் அருகிலும், மாலை 6 மணிக்கு உளுந்தூர்பேட்டை பேருந்து நிலையம் அருகிலும் பரப்புரைகள் நிகழ்ந்தன. கழக ஆதரவாளர் மதிய உணவுக்கு ஏற்பாடு செய்தார். கழக ஆதரவாளர் ஆறுமுகம் குழுவினருக்கு இரவு உணவும் தோழர்கள் தங்குவதற்கும் ஏற்பாடு செய்தார். கழகத் தோழர்கள் வெற்றிவேல் மற்றும் சி. ஆசைத்தம்பி நிகழ்ச்சியில் பங்கேற்றனர். நெடுமானூரைச் சார்ந்த ஜெ.சதீஷ்குமார், பெ.நடராசன், மு.பெரியசாமி, மு.ஏழுமலை, பு.கண்ணதாசன், கோ.கருணாகரன் ஆகிய ஆறு பேர் கழகத்தில் இணைந்தனர். அதே போன்று உளுந்தூர்பேட்டை வட்டம் சீயமங்கலம் கிராமத்திலிருந்து மா. ஜெயபிரகாசு தலைமையில் பத்து தோழர்கள் இணைந்தனர்.

21.3.2013 காலை 10 மணியளவில் அரசூர் பேருந்து நிறுத்தம் அருகிலும், காலை 11.30 மணியளவில் விழுப்புரம் பழைய பேருந்து நிறுத்தம் அருகிலும் பரப்புரை நடைபெற்றது. இந்நிகழ்வில் பெண்கள் கூட்டமைப்பைச் சார்ந்த வீரம்மாள், வழக்கறிஞர் லூசியா ஆகியோர் பங்கேற்று உரையாற்றினர். கழகத் தோழர்களுக்கு வழக்கறிஞர் லூசியா எலுமிச்சை சாறு வழங்கினார். பிற்பகல் 1 மணிக்கு விக்கிரவாண்டியில் பரப்புரை நடைபெற்றது. இதில் அர்ச்சகர் பயிற்சி முடித்த வெங்கடேசன் பங்கேற்று, பார்ப்பனர்களின் மோசடிகளை தோலுரித்தார். மாலை 4.30 மணியளவில் கூட்டேரிப்பட்டிலும், மாலை 6 மணியளவில் திண்டிவனம் பேருந்து நிறுத்தம் அருகிலும், இரவு 8 மணிக்கு மில் அருகிலும் பரப்புரை நடைபெற்றது. வழக்கறிஞர்கள் திலீபன், பூபாலன், சந்திரசேகரன், குமார் வி.சி. ஆகியோர் தோழர்களை வரவேற்றனர். திண்டிவனத்தில் நடந்த நிகழ்வில் பேராசிரியர் கல்விமணி, வழக்கறிஞர்விஜயன் ஆகியோர் உரை நிகழ்த்தினர். இந்த ஒரு நாள் நிகழ்வு முழுதும் கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், தோழர் பிரகாசு ஆகியோர் பயணத்தில் பங்கேற்றனர். மதிய உணவு விழுப்புரம் கணேசன் ஏற்பாடு செய்தார். தோழர்கள் இரவு தங்குவதற்கு செஞ்சி சாரதா மேல்நிலைப் பள்ளி உரிமையாளர் கலைச்செல்வன் ஏற்பாடு செய்தார். இரவு உணவு எழில் பாலசுந்தரம் ஏற்பாடு செய்தார்.

(மீதி அடுத்த இதழில்

### பரப்புரை இயக்கம் சந்தித்த ஆதரவும் எதிர்ப்பும்

1. பயணத்தில் 18 தோழர்கள் பங்கேற்றனர்.
2. பொது மக்கள், வணிகர்களிடம் உண்டியல் ஏந்தியதில் கிடைத்த தொகை ரூ. 52,000.
3. உண்டியல் ஏந்தி, துண்டறிக்கைகள் வழங்கிய போது தோழர்களிடம் ஜாதி ஆதரவாளர்கள் காட்டிய வெறுப்பு, அவமதிப்புகளை தோழர்களை பொறுமையுடன் ஏற்றுக் கொண்டனர்.
4. அதே நேரத்தில் பல இடங்களில் உடன்பாடுள்ள தோழர்கள் தன்னிச்சையாக வெளிப்படுத்திய ஆதரவும் உணர்வுகளும் உதவிகளும் பெரும் உற்சாகத்தைத் தந்தன.
5. தோழர்களின் கருத்துரைகளைக் கேட்டு பல இடங்களில் குளிர்பானம், பழங்கள், தேநீர், உணவு என்று தானாக முன் வந்து வழங்கி, திக்குமுக்காடச் செய்து விட்டனர்.
6. பத்து நாள் பயணங்களில் “எங்கள் தலைமுறைக்கு ஜாதி வேண்டாம்” என்ற தலைப்பில் ஜாதிக்கு எதிரான கருத்துகளைக் கொண்ட 20,000 துண்டறிக்கைகள் மக்களிடையே பரப்பப்பட்டன. துண்டறிக்கையை படித்தவர்கள் பத்திரமாக எடுத்துச் சென்றனர். தாமாக முன் வந்து துண்டறிக்கைகளை வாங்கிப் படித்தனர்.
7. பல இடங்களில் தங்கள் பகுதியிலுள்ள தீண்டாமைகளை தோழர்களிடம் கூறினர்.
8. இந்தப் பயண நிகழ்வுகளில் 38 தோழர்கள் கழகத்தில் இணைந்தனர்.
9. இத்தகைய மக்களை சந்திக்கும் பரப்புரை இயக்கங்கள் தொடர வேண்டும் என்று பலரும் கூறினர்.

**– அய்யனார்**

### நெல்லை மாநாட்டிற்கு உழைத்த தோழர்கள்

பிரபாகரன் (பரப்புரைச் செயலாளர்), கோ.அ.குமார் (மண்டலச் செயலாளர்), பொறிஞர் சி.அம்புரோசு (மாவட்ட தலைவர்), க. மதன் (மாவட்ட செயலாளர்), ரவி சங்கர்; (மாவட்ட பொருளாளர்), பால். அறிவழகன் (நகர செயலாளர்), வே. பால்ராசு (மாவட்ட துணைத் தலைவர்), ச.கா. பாலசுப்பிரமணியன் (மாவட்ட துணைச் செயலாளர்), சா.த. பிரபாகரன் (மாநகரத் தலைவர்), குமரி – செ. செல்லத்துரை, மு.கனகராசு, வ. அகர சூசையப்பர் (மாவட்ட தலைவர்), வழக்குரைஞர் வே. சதா (மாவட்ட செயலாளர்), அ. சேவியர் (மாவட்ட அமைப்பாளர்), நீதியரசர், பேபி ஜெபக்குமார் (மாவட்ட பொருளாளர்), நெல்லை – சி.அ. காசிராசன் (மாவட்ட அமைப்பாளர்), கீழப்பாவூர் சு. அ ன்பரசு (மாவட்ட துணை அமைப்பாளர்), கீழப்பாவூர் – ஓவியன், சுப்பையா, மாதவன், முருகன், பாவூர் சத்திரம் செய்தியாளர் இராசேந்திரன், ஆழ்வை ஒன்றிய செயலாளர் இரா. உதயகுமார், ஒன்றிய தலைவர் நாத்திகம் ஆ. முருகேசன், திருவை ஒன்றிய செயலாளர் சந்தனராஜ், தென்காசி ஆசிரியர் ராஜா.

DATE OF PUBLICATION 27.03.2013
PURATCHI PERIYAR MUZHAKKAM

TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/12-14
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/7776

# ஜாதிக் கட்டமைப்பு சரிந்தே தீரும்

முதல் பக்கத் தொடர்ச்சி




போட்டது வர்ணா ஸ்ரமம் கட்டமைத்த ஜாதி அமைப்பு. அந்த ஜாதி கட்டமைப்பு தகர்க்கப்பட்டுத் தான் தமிழ்நாட்டில் 69 சதவீத சூத்திர பஞ்சமர்கள், கல்வி உரிமையைப் பெற் றிருக்கிறார்கள். இப்படி அரசியல், பொருளாதார தளங்களில் ஜாதியம் படிப் படியாகக் குறைந்து வருகிறது. திருமண முறைகளில் வாழ்வியலில் மக்கள் மூளை யில் திணிக்கப்பட்ட ‘ஜாதி’ பல்வேறு வடிவங்களில் இயங்கிக் கொண்டிருக்கிறது.

இந்தக் கொடுமைகள் ஒடுக்குமுறைகளுக்கு எதிராகவே நாம் தொடர்ந்து போராடுகிறோம். ஒரு காலத்தில் திருமணம் என்றாலே அது ஒரே ஜாதிக்குள்தான் என்ற நிலைமை மாறி, ஜாதி மறுப்புத் திருமணங்கள் நடக்கின்றன. இதுவே ஜாதியமைப்பு தோற்று வருகிறது என்பதன் அடையாளம் தானே? ஜாதி மறுப்புத் திருமணத்துக்கு எதிராக ஜாதியவாதிகளை மருத்துவர் ராமதாசு அணி திரட்ட வேண்டிய நிலை உருவாகியிருப்பதே ஜாதியமைப்பு நெருக்கடிக்கு உள்ளாகி வருகிறது என்பதைத்தானே காட்டுகிறது? எந்த ஒரு பழமையான பிற்போக்கான அமைப்பும் அதற்கான பயன்பாடுகள் குறையும்போது தானாகவே செல்வாக்கை இழந்து விடும். எனவே தான் ஜாதியம் எனும் புரையோடிப் போன கொடூரமான சமூக அமைப்பின் கேடுகள், ஒடுக்கு முறைகள் பெருகி வருவதை நாங்கள் படம்பிடித்து, அதன் சமூக செல்வாக்கை கேடுகளை அம்பலப்படுத்தி வருகிறோம். இறுக்கமான இந்த ஜாதியமைப்பின் அடித்தளங்களையும் அதன் மேல் கட்டப்பட்ட தீண்டாமை ஒடுக்குமுறை வடிவங்களையும் ஒரே நேரத்தில் மக்கள் ஆதரவோடு அசைக்கத் தொடங்கி யுள்ளோம். அதற்காக இளம் தலைமுறையை அணி திரட்டுகிறோம். எங்கள் தலைமுறைக்கு ஜாதி வேண்டாம் என்று இயக்கம் நடத்துகிறோம். ஜாதிய கட்டமைப்பில் கடந்த காலங்களில் பெரியாரும், அம்பேத்கரும், ஏனைய தலைவர்களும் நடத்திய போராட்டங்கள் விரிசலை உருவாக்கி வைத்துள்ளது. இது வீழ்ச்சியடையும் வரை ஜாதியின் சமூகப் பயன்பாடுகள் செல்லாதவை களாக, தேவையற்றவைகளாக மாறும் வரை அதற்கான போராட்டத்தை நாங்கள் முன்னெடுப்போம். அணையப் போகும் விளக்கு ஒளி வீசிப் பிரகாசிப் பதைப் போல் தோன்றலாம்; ஆனால், இந்த ஜாதிய கட்டமைப்பு செல்வாக் கின்றி சரிந்து வீழும். அதற்கு காலம் நிர்ணயிக்க முடியாது. ஆனால், மறைந்தே தீரும். இதுதான் கடந்த காலங்களிலிருந்து நிகழும் சமூகப் போக்கு. இதுவே ஜாதியை ஒழித்துவிட முடியுமா என்று கேட்கும் ஜாதியவாதிகளுக்கு நாங்கள் தரும் பதில்” என்று விடுதலை இராசேந்திரன் குறிப்பிட்டார்.

“மத்திய அரசுப் பதவிகளில் பிற்படுத்தப்பட்ட மக்களின் பிரதிநிதித்துவம், தாழ்த்தப்பட்டவர்களைவிட குறைவாக இருக்கும்போது, அந்த உரிமைக்குப் போராட வேண்டிய இந்த பிற்படுத்தப்பட்ட ஜாதித் தலைவர்கள் அதைச் செய்யாமல், தாழ்த்தப்பட்டோருக்கு எதிராகப் போராட கிளம்புவது ஏன்?” என்று கழகத் தலைவர் கொளத்தூர் மணி கேட்டார்.

“மத்திய அமைச்சர் நாராயணசாமி நாடாளுமன்றத்தில் 2008 நவம்பரில் தந்த புள்ளி விவரப்படி 3, 4, 5 ஆம் நிலைப் பதவிகளில் தாழ்த்தப்பட்ட பழங்குடி மக்கள் 24 புள்ளி 79 விழுக்காடு உள்ளனர். ஆனால், பிற்படுத்தப்பட்டவர்களோ, 7 புள்ளி 11 விழுக்காடுமட்டுமே உள்ளார்கள். அதேபோல், மய்ய அரசின் முதல் நிலைப் பதவிகளில், தாழ்த்தப்பட்ட பழங்குடி மக்கள் 17 புள்ளி 39 சதவீதம் உள்ள போது, மக்கள் தொகையில் 52 விழுக்காடு உள்ள பிற்படுத்தப்பட்டவர்கள் வெறும் 17 புள்ளி 39 சதவீதம்தான் உள்ளார்கள். இதிலே யார் மேல் ஜாதி? யார் கீழ் ஜாதி? மத்திய அரசுப் பதவிகளிலே கீழ் ஜாதியாக பிற்படுத்தப்பட்டவர்களும் அவர்களைவிட மேல்ஜாதியாக தாழ்த்தப்பட்டவர்களும் தான் உள்ளனர். பிற் படுத்தப்பட்ட சமுதாயத்துக்காக நாங்கள்தான் போராடுகிறோம் என்று இங்கே ஜாதிப் பெருமையைத் தூக்கி வரும் தலைவர்களிடம், ‘முதலில் மத்திய அரசில் மறுக்கப்படும் உரிமைகளுக்குப் போய் போராடு’ என்று நீங்கள் கேட்க வேண்டும்.

நாங்கள் திராவிடர் விடுதலைக் கழகத்தினர் பெரியார் தொண்டர்கள் பிற் படுத்தப்பட்டோர் உரிமைகள் பறிக்கப்படுவதை எதிர்த்துப் போராடியவர்கள், வீரப்ப மொய்லி அறிக்கையை எரித்தோம்; பிற்படுத்தப்பட்டோர் உரிமை களுக்குப் பேராடிய அதே பெரியார் தொண்டர்களாகிய நாங்கள்தான் இப்போது தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஆதரவாக ஜாதிவெறி பேசும் இந்த பிற்படுத்தப்பட்ட தலைவர்களுக்கு எதிராகவும் போராடுகிறோம்” என்றார் கழகத் தலைவர் கொளத்தூர் மணி.

பயணத்தில் பங்கேற்ற தோழர்களுக்கு கழகத் தலைவர், பொதுச் செயலாளர் கருப்பு ஆடைகளை போர்த்தி பாராட்டினர். காஞ்சி மாவட்ட கழகத் தலைவர் டேவிட் பெரியார் நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்தார். தோழர் சுகுமார் நன்றி கூறினார்.

**– நமது செய்தியாளர்**

# திருச்சியில் தமிழர் ஒற்றுமைக்கான ஜாதி-தீண்டாமை ஒழிப்பு மாநாடு

*6.4.2013* சனிக்கிழமை மாலை 5 மணி, சத்திரம் பேருந்து நிலையம், திருச்சி.

மேட்டூர் டி.கே.ஆர். இசைக் குழுவின் இசை நிகழ்ச்சி; மேட்டூர் கருப்பரசன் கலைக்குழுவின் வீதி நாடகம், பறையாட்டம், அறிவியல் விளக்க நிகழ்ச்சிகள்.

வரவேற்புரை : புதியவன், திருச்சி மண்டல அமைப்புச் செயலாளர்.

தொடக்க உரை : ப. இரத்தினசாமி, மாநிலப் பொருளாளர், தி.வி.க.

தலைமை : கொளத்தூர் மணி, தி.வி.க.

கருத்துரை : விடுதலை க. இராசேந்திரன்-பொதுச் செயலாளர், தி.வி.க.; பேராசிரியர் ஹாஜாகனி-மாநிலச் செயலாளர், தமிழ்நாடு முஸ்லீம் முன்னேற்றக் கழகம்; வழக்கறிஞர் நீலவேந்தன்-நிதிச் செயலாளர், ஆதித் தமிழர் பேரவை; வழக்கறிஞர் ஆர்த்தி-கரூர்; பால். பிரபாகரன்-மாநில பரப்புரைச் செயலாளர்.

நன்றியுரை : பொன்னுசாமி-ஜெயில்பேட்டை

நிகழ்ச்சி ஒருங்கிணைப்பு : குணராஜ்-திருச்சி மாவட்ட அமைப்பாளர்

**– திராவிடர் விடுதலைக் கழகம், திருச்சி மண்டலம்**

## கழகத் தோழர்களுக்கு முக்கிய வேண்டுகோள்

கழகத் தலைவர்-பொதுச் செய லாளரை கழக நிகழ்ச்சிகளுக்கு அழைக்கும் கழகத் தோழர்கள், வழிச் செலவு தொகையாக ஒவ்வொரு வருக்கும் ரூ.2500/-அய், மாநில கழகப் பொருளாளரிடம் முன்கூட்டியே செலுத்திட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம். கழகத் தலைவர் பங்கேற்கும் நிகழ்ச்சிகள் அனைத்தும் வீடியோ பதிவு மற்றும் புகைப்படங்கள் எடுக்கப்பட்டு வருகின்றன. எனவே நிகழ்ச்சிகளைப் பதிவு செய்து, வீடியோ ஒளி நாடா மற்றும் நிகழ்ச்சிகளின் புகைப்படங் களை கழகத் தோழர்கள் பெற்றுக் கொள்வதற்காக கூடுதலாக ரூ.1000/- (அதாவது மொத்தம் ரூ.3500) கழகத் தலைவர் பங்கேற்கும் நிகழ்ச்சிகளுக்கு மட்டும் செலுத்தக் கோருகிறோம். திருமண நிகழ்வுகளில் பங்கேற்பதற்கு கழகத் தலைவர், பொதுச் செய லாளருக்கு ரூ.5000 தனித்தனியாக செலுத்திட வேண்டும்.

கழகத்தின் வளர்ச்சி கருதி, தோழர்கள் இதைக் கண்டிப்பாக பின் பற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படு கிறார்கள்.

**- ப. இரத்தினசாமி,**
பொருளாளர்,
திராவிடர் விடுதலைக் கழகம்

**ப. இரத்தினசாமி**
இந்தியன் ஓவர்சீஸ் வங்கி,
சூரம்பட்டிக் கிளை
கணக்கு எண்: 101502000001466

## குழந்தைகளுக்கு ‘பழகு மகிழ்வு முகாம்’: தோழர்களுக்கு வேண்டுகோள்

2013, மே 17, 18, 19 தேதிகளில் திராவிடர் விடுதலைக் கழகக் குடும்பங்களின் குழந்தைகளுக்கான “பழகு மகிழ்வு முகாம்” திண்டுக்கல்லில் ‘லைஃப் சென்டர்’ நிறுவனத்தில் ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. கழகத்தின் முன்னணி அமைப்பான தமிழ்நாடு அறிவியல் மன்றம் இந்த முகாமை பொறுப்பேற்று நடத்துகிறது. 8-லிருந்து 15 வயதுக்குட்பட்ட குழந்தைகள் இந்த பழகு முகாமில் பங்கேற்கலாம். தோழர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொடர்பு எண்:

ஆசிரியர் வீ. சிவகாமி, செல்: 9842448175

ஆசிரியர் ப. சிவகுமார், செல்: 9688856151

### நன்கொடை

எம். இராஜேஷ்குமார்-ஆர்.வைஷாலி மணவிழா மகிழ்வாக சமத்துவத்திற்கான இளைஞர்களின் பரப்புரைப் பயணத்திற்கு நன் கொடை ரூ.1000 வழங்கப்பட்டது.

நாமக்கல் மாவட்ட கழகப் பொருளாளர் சி.மாதுராசு தந்தை கொ.சின்னதம்பி இரண்டாம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு, அவரது நினைவாக ரூ.500 நன்கொடையாக கழக ஏட்டுக்கு வழங்கியுள்ளார்.

### திருத்தம்

21.3.2013 ‘புரட்சிப் பெரியார் முழக்க’த்தில் 4 ஆம் பக்கத்தில் ‘இந்து ஏட்டின் மனுதர்மபுத்தி’ எனும் தலைப்பில் வெளி வந்த கட்டுரையின் முதல் வரியில் “தமிழ்நாட்டில் ஈழ விடுதலைக்கு ஆதரவாக மாணவர்கள் களத்தில் இறங்கியுள்ளனர் என்று திருத்திப் படிக்கக் கோருகிறோம்.

தவறுக்கு வருந்துகிறோம். (ஆர்)

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP    Posted on: 28th March 2013

OWNER & PUBLISHER & EDITOR : K. RAJENDRAN, PUBLISHED AT 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.